Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/1105)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 07 வெள்ளிக்கிழமை (23.12.2011) பக்கங்கள் 16 ஓசை – 83



சிவில் சமூகத்தின் பெயரால்... (11)



கல்யாணத்திற்கு தொந்தரவு (12)



வெள்ளத்தால் அவலம் (15)



ஈ.பி.டி.பி. அரச பிரதிநிதிகள் சந்திப்பில் (14)

## இனப்பிரச்சினை தீர்வுக்கு சூழல் சாதகம்
## சம்பந்தனுக்கு அமைச்சர் டக்ளஸ் ஆலோசனை



(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வை எட்டுவதற்குத் தற்போது காலம் கனிந்துள்ளது. தமிழ் மக்களுக்கான சாதகமான சூழல் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நிலவுகின்றது. எனவே தமிழ் அரசியல் கடசிகள் அனைத்தும் ஒருங்கிணைந்து செயற்பட்டால் அரசுடன் இணைந்து பிரச்சினைக்கான தீர்வு குறித்துச் சாதகமாகப் பேசி சாத்தியமான தீர்வு ஒன்றை எட்டிக்கொள்ள முடியும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுபபினருமான இரா.சம்பந்தனுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

நேற்று இரவு வசந்தம் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றின் போது நேயர்களின் கேள்விகளுக்கு பதில் வழங்கும்போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்படி தகவலை வழங்கியிருந்தார்.

நேற்று முன்தினம் இரவு சபாநாயகரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்ற விருந்துபசாரத்தில் கலந்துகொண்டபோதே நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தனுடன் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்துதான் உரையாடியதாக அமைச்சர் தெரிவித்தார். தமிழர்களுக்குரிய தீர்வு வழங்கப்படுவது (15 ஆம் பக்கம் பார்க்க)

## விடுமுறை இல்லை

எதிர்வரும் 26 ஆம் திகதியை பொது விடுமுறை தினமாக அறிவிபதற்கான எந்த முடிவும் எடுக்கப்படவில்லையென பொதுநிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது. எதிர்வரும் 26 ஆம் திகதி வணிக விடுமுறை தினமாக அறிவிக்கும் சாத்தியக்கூறு காணப்படுவதாக முதலாளிகள் சம்மேளனம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அனுமதியற்ற விடுதிகள் மீது விரைவில் சட்ட நடவடிக்கை
### யாழ். மாநகரசபை அதிரடி அறிவிப்பு


(யாழ்ப்பாணம்)

2012 மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்குப் பிற்பாடு யாழ். மாநகர சபைப் பகுதியில் சட்டப்படி யாழ். மாநகரசபையினதும் நகர அபிவிருத்தி அதிகாரசபையினதும் அனுமதியைப் பெற்றுக்கொள்ளாது இயங்கும் விடுதிகள் மீது பொலிஸார் நடவடிக்கை எடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

நேற்று யாழ். நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற யாழ். நகர விடுதி உரிமையாளர்களுடனான சந்திப்பிலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. யாழ். மாநகர சபையினால் ஒழுங்குசெய்யப்பட்ட இக் கலந்துரையாடலிற்கு யாழ் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமை வகித்தார்.

யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்திரன் மாநகர சபை (15 ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண கூட்டமைப்புடன் பேசிப்பயனில்லை



இனப்பிரச்சினை தீர்வு விடயம் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் எவ்வித பிரயோசனமும் இல்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்குமாறு அவர்கள் கோருவதாகவும் அவ்வாறு வழங்க அரசாங்கம் ஒருபோதும் இணங்காது எனவும் அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல குறிப்பிட்டார்.

இருந்தபோதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைத் தொடர்ந்தும் கோரிவருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கம் அவற்றை வழங்க முன்வராது என்பதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்துவது (15 ஆம் பக்கம் பார்க்க)

## காணி - பொலிஸ் அதிகாரமற்ற தீர்வு தமிழ் மக்களுக்குத் தேவையில்லை

மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் இல்லாமல் அரசு ஒரு தீர்வை முன்வைக்க விரும்புமானால் அப்படியான தொரு தீர்வு தமிழ் மக்களுக்குத் தேவையில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது. காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாது எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவிக்கும்போது காணி, பொலிஸ் அதிகாரங்கள் இல்லாமல் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதனால் எந்தப் பயனும் இல்லை என்று தெரிவித்தார். காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் மாகாண அரசு ஒன்றுக்கு இருக்கவேண்டிய அடிப்படை தேவைகளாகும். என்றும் காணி அதிகாரம் இல்லாவிட்டால் மாகாணத்திற்குள் அபிவிருத்தி நடவடிக்கையை (15 ஆம் பக்கம் பார்க்க)



## பாலியல் பலாத்காரம் தாவடி இளைஞர் கைது

(யாழ்ப்பாணம்)


வீட்டில் இருந்த 15 வயதுடைய சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்த முயற்சித்ததாகக் குற்றம் சுமத்தப்பட்ட ஒரு பிள்ளையின் தந்தையார் ஒருவர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தாவடிப்பகுதியில் குறித்த வீட்டில் தாயார் மரணச் சடங்கு ஒன்றிற்குச் சென்ற தைப் பார்த்திருந்த அதே பகுதியைச் சேர்ந்த இளைஞர் சிறுமியின் வீட்டிற்குச் (15 ஆம் பக்கம் பார்க்க)

## மாங்களநேசன் மீது தாக்குதல்

யாழ்.மாநகரசபையின் அங்கத்தவரான மனுவல் மங்களநேசன் நேற்று மாலை இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டதினால் படுகாயமடைந்துள்ளார். நேற்று மாலை யாழ். நகரின் நாவலர் வீதி மற்றும் கஸ்தூரியார் வீதி சந்திக்கும் சந்திப்பகுதியில் அவர் பயணித்துக்கொண்டிருந்த சமயம் (15 ஆம் பக்கம் பார்க்க)

## விருந்துண்டு மகிழ்வு கண்டனர்




வரவு செலவுத்திட்டம் மீதான வாக்கெடுப்பின் போது வரவு செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்த கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவினர் அன்று இரவு சபாநாயகர் சாமல் ராஜபக்ஷவின் இல்லத்தில் இடம்பெற்ற இரவுப் போசன விருந்தில் கலந்துகொண்டு ஆளும் கட்சி உறுப்பினர்களுடன் இணைந்து அறுசுவை உணவு உண்டு மகிழ்ந்தனர்.

## போனஸ் 10,000 ரூபா

அரசின் பூரண கட்டுப்பாட்டிலுள்ள கம்பனிகளின் ஊழியர்களுக்கு 2011 ஆம் ஆண்டுக்கான போனஸ் மற்றும் ஊக்குவிப்புப் பணம் வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. நிதி மற்றும் திட்ட அமுலாக்கல் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்வைத்த ஆலோசனைக்கு ஏற்ப இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் இவ்வருடம் இலாபமீட்டிய நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு வருட போனஸ் பணமாக 10000 ரூபா வழங்கப்படவுள்ளது.

அத்துடன் வரவு மற்றும் செயற்திறன் அடிப்படையில் ஊக்குவிப்புக் கொடுப்பனவாக 7500 ரூபா பணமாக வழங்கப்படவுள்ளது. இதேவேளை நட்டத்தில் இயங்கும் நிறுவன ஊழியர்களுக்கு 1000 ரூபா ஊக்குவிப்புத் தொகை வழங்கப்பட உள்ளதுடன் நட்டத்தில் இயங்கியபோதும் கடந்த வருடத்தைவிட நட்டம் குறைவடைந்த நிறுவன ஊழியர்களுக்கு 2000 ரூபா போனஸ் தொகை வழங்கப்படவுள்ளது.

# ஆசிரிய இடமாற்றம் பற்றிய சர்ச்சை மாடிப் படியில் அமர்ந்து போராட்டம்



(மருதனார்மடம்)

வருடாந்த இடமாற்றத்துக்குத் தகுதிபெற்ற வெளிமாவட்ட ஆசிரியர்கள் தமக்கான இடமாற்றத்தை தவணை ஆரம்பத்திலேயே வழங்குமாறு கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை நேற்று நடத்தியுள்ளனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா போன்ற வெளிமாவட்டங்களில் கடமையாற்றிய யாழ்ப்பாணத்தைச் சொந்த இடமாகக் கொண்ட ஆசிரியர்களே இப்போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

இவ் ஆசிரியர்கள் ஐந்து வருடங்களுக்கு மேலாக வெளிமாவட்டத்தில் சேவை புரிந்து தங்களுடைய வலயங்களில் இருந்து விடுவிக்கப்பட்டு வருடாந்த இடமாற்றத்துக்குத் தகுதி பெற்றிருந்தார்கள்.

இவர்களின் இடமாற்ற அனுமதியை அந்தந்த வலயங்கள் உறுதி செய்து மாகாணத்திற்கு அனுப்பி வைத்திருந்தது.

மேற்படி ஆசிரியர்களுக்கான இடமாற்ற அனுமதியும், இடமாற்றம் செய்யப்படவுள்ள ஆசிரியர்களின் விபரமும் டிசம்பர் மாதம் 3 ஆம் வாரமளவில் வெளியிடுவதாக மாகாண கல்வித் திணைக்களம் ஏற்கனவே தகவல் தெரிவித்திருந்தது.

இந்நிலையில், இந்த இடமாற்றத் திகதியை எதிர்வரும் மார்ச் மாதம் அளவில் மாகாணத் திணைக்களம் தற்போது பிற்போட்டுள்ளது.

இவ்வாறு மார்ச் மாதம் அளவில் பிற்போடப்பட்ட இடமாற்றத்தை ஜனவரி மாதம் ஆரம்பத்தில் அதாவது பாடசாலை ஆரம்பிக்கப்படுகின்ற வேளையிலேயே அமுல்படுத்துமாறு கோரியே மேற்படி ஆசிரியர்கள் கவனயீர்ப்பு போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

வருடத்தின் ஆரம்பத்தில் இவ்வாறான இடமாற்றம் செய்வது மாணவர்களின் நலனையும், ஆசிரியர்களது பொறுப்புக்களையும் கருத்தில் கொண்டதாக அமையும் என மேற்படி ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

நேற்றைய தினம் மேற்படி ஆசிரியர்கள் மாகாணத் திணைக்களம் அமைந்துள்ள மருதனார் மடத்தில் ஒன்றுகூடி திணைக்களத்திற்குச் செல்லும் மேல்மாடிப் படிக்கட்டுக்களில் ஏறி அமர்ந்திருந்து தமது போராட்டத்தை நடத்தினர்.

இதேவேளை, போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்களை சந்தித்த வட மாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் நேற்றைய தினம் முக்கிய கூட்டமொன்று உள்ளதாகவும், அதில் ஆசிரியர்களின் மேற்படி கோரிக்கை குறித்து தெரிவித்து முடிவினை அறிவிப்பதாகத் தெரிவித்ததையடுத்து, ஆசிரியர்கள் தமது போராட்டத்தை கைவிட்டனர்.

எனினும், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் தமது கோரிக்கைக்குச் சாதகமான பதில் வழங்கப்படாது விடின், எதிர்வரும் திங்கட்கிழமை மீளவும் தமது போராட்டம் தொடரும் எனவும் தெரிவித்தனர். (17)



பலாலி ஆசிரியர் கலாசாலையின் "கலாவதி" சஞ்சிகை வெளியீடும், ஒளிவிழா நிகழ்வும் நேற்று மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் நடைபெற்றபோது, பிரதம விருந்தினர் யாழ்.எகட் கரிதாஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் அருட்பணி ஜே.க. பேனாட் ரெக்னோ, கல்லூரியின் அதிபர் ம.இக்னேசியஸுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதைக் காணலாம். (பா.சிகான்)

## ஆஞ்சநேயர் ஜெயந்தி

(குருநகர்)

நாகேஸ்வரம், ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை ஆஞ்சநேயர் ஜெயந்தி சிறப்பாக நடைபெறவுள்ளது.

காலை 8.00 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசைகள் ஆரம்பமாகும். 9.00 மணிக்கு சிறப்பு சமயச் சொற்பொழிவு இடம்பெறும்.

முற்பகல் 10.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து ஆஞ்சநேய சுவாமி வீதியுலா எடுத்துச் செல்லப்படுவார். (68)

## விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையால் நடத்தப்படும் ஜே/81 கிராம சேவையாளர் பிரிவின் மக்கள் பங்கேற்புடனான கிராம அபிவிருத்தி திட்டமிடல் கூட்டம் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு ஜே/81 கிராம சேவையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பங்கு பற்றி தங்கள் பிரிவின் கிராம அபிவிருத்திக்கான ஆலோசனைகளை வழங்குமாறு யாழ். மாநகர சபை முதல்வர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## யாழ்.செயலகத்தில் இன்று ஒளிவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டச் செயலக நலன்புரிக் கழகமும், மாவட்ட சமுர்த்தி அலுவலகமும் இணைந்து நடத்தும் ஒளிவிழா இன்று காலை 9.30 மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழக கிறிஸ்தவ நாகரிகத்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் அருட்திரு கலாநிதி ஜே.ஜெபமோகன் ஆரம்ப செபத்தினையும், ஆசியுரையினை அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் நிகழ்த்தவுள்ளதுடன், இந்நிகழ்வில், யாழ். ஆயர் அதி வணக்கத்துக்குரிய சவுந்தரநாயகம் ஆண்டகையும் கலந்து கொண்டு ஆசி வழங்கவுள்ளார். (எப்.எஸ்)

## சுமங்கலி விடுதி வழக்கு இருவருக்குப் பிணை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் சுமங்கலி விடுதியில் விபச்சாரத்தில் ஈடுபட்டதாகக் கூறப்பட்டுக் கைது செய்யப்பட்ட நபர்களில் இருவர் 2 இலட்சம் ரூபா காசுப் பிணையிலும் 1 இலட்சம் ரூபா பெறுமதியான 2 ஆட் பிணையிலும் செல்ல யாழ். நீதவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

மேற்படி வழக்கில் தொடர்புடைய நபர்கள் இருவரும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் நீதிமன்றில் கையொப்பமிட வேண்டுமெனவும். யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராசா உத்தரவிட்டார். (எஸ்)

## இளைஞர் படுகாயம்

ஆட்டோ மோட்டார் ஸ்சைக்கிளுடன் மோதியதில் இளைஞர் படுகாயமடைந்தார்.

காங்கேசன்துறை வீதியில் நேற்று மதியம் 2.30 மணியளவில் இடம்பெற்ற இவ் விபத்துச் சம்பவத்தில் கண்டிப் பகுதியைச் சேர்ந்த சுபேர் சாதித் (வயது-19) என்ற இளைஞர் படுகாயமடைந்தார். (எஸ்)


## ஆட்கள் தேவை

எமது பிளாஸ்ரிக் தொழிலகத்திற்கு ஆட்கள் தேவை

**தொடர்பு : டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**
**கனகசபை லேன்**
**சிவலிங்கப் புளியடி**
**யாழ்ப்பாணம்.**

**தொ.பே : 021 222 8680, 0775925088** (C/1145)

## அருள்ஞான ஜோதிடம்

அருள் ஞானத்தால் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே பிழைத்ததில்லை. நடந்தது, நடப்பது, நடக்கப்போவது இவற்றுடன் எனது அருள் ஞான ஜாதகக் கணிப்பினால் மை வெளிச்சம் போல் உங்கள் வாழ்க்கையைத் தெரிந்துகொள்ளலாம். அத்துடன் ஒருவர் என்னிடம் 4 ஜாதகங்களுக்கு மேல் கணிப்பு செய்து எடுத்தால் Gem Cooperation உத்தரவாதக் கடிதத்துடன் அவர்களுக்கு அதிஷ்டம் தரக்கூடிய அதிஷ்டக் கல்லை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.தேசப்பந்து, பேராசிரியர். P.K.சாமி J.P.ஐயா. ஸ்ரீ துர்க்காதேவி அருள் சக்தி இல்லம், இல. 23, மேபீல்ட் வீதி, கொழும்பு - 13. 011234263/64. (வீண் அலைச்சலை தவிர்க்க முன கூட்டியே அறிவித்து, அந்த நேரத்தில் மாத்திரம் வரவும். (C/1102)

## சிறு விளம்பரம்

### டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (C/1041)

## பனை அபிவிருத்திச் சபை
PALMYRAH DEVELOPMENT BOARD

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF TRADITIONAL INDUSTRIES AND SMALL ENTERPRISES DEVELOPMENT

### கனரக இயந்திர இயக்குனர் - பயிலுனர் பதவி
(Heavy Machinery Operator - Trainee)

மேற்படி பதவிக்கு கீழ்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| வயதெல்லை | : 18 - 45 வருடங்கள் |
| கல்வித் தகைமை | : கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் குறைந்தது 02 பாடங்களில் சித்தி. |
| ஏனைய தகைமைகள் | : "A" தர மோட்டார் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் |

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்ப படிவங்களை 05.01.2012 இற்கு முன்னர் எமது தலைமை அலுவலகத்திற்கு கிடைக்க கூடியவாறு பதிவுத் தபால் மூலம் கீழ் வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**பசுபதி சீவரத்தினம்.**
**தலைவர்.**
**பனை அபிவிருத்திச் சபை. தேசிய வீடமைப்புச் செயலகம்.**
**கண்டி வீதி.**
**யாழ்ப்பாணம்.** (C/1144)

## பனை அபிவிருத்திச் சபை
PALMYRAH DEVELOPMENT BOARD

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF TRADITIONAL INDUSTRIES AND SMALL ENTERPRISES DEVELOPMENT

### கற்பகச்சோலை உருவாக்க வாரீர்!

**பாலைவனமாக மாறக்கூடிய நிலையில் உள்ள**
**பனைவளமுள்ள பிரதேசங்களை**
**கற்பகச் சோலை ஆக்குவதற்கு வாரீர்.!**

பனை அபிவிருத்திச் சபையானது இயந்திரம் (Excavator) மூலமாக பனம் கன்றுகளை அகழ்ந்து புதிய இடங்களில் நடுகை செய்வதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றது.

எனவே பனங்காணி உரிமையாளர்கள் தங்களிடம் உள்ள பனம் கன்றுகளை (வடலிகளை) அழிக்காது எம்முடன் தொடர்பு கொண்டு பொருத்தமான இடங்களில் வடலிகளை நடுகை செய்வதற்கு ஒத்துழைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**தலைவர்.**
**பனை அபிவிருத்திச் சபை. தேசிய வீடமைப்புச் செயலகம்.**
**கண்டி வீதி.**
**யாழ்ப்பாணம்.** (C/1146)

**இறைவனின் பாதம் தர்மத்தையும், கைகள் மோட்சத்தையும், முகம் இறைவடிவத்தையும் காட்டுகிறது. இவற்றுள் இறைவனின் பாதமே மிக உயர்ந்தது. எனவே தான் இறைவனின் திருவடிகளைப் பூஜிக்கச் சொல்கிறார்கள் பெரியோர்.**

**- பாபா -**

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## ஆறுவது சினம்; சீறுவது அல்ல

பாதிப்புகளுக்குள்ளான சமூகம் என்ற வகையில், எங்களிடமிருந்து வெளிப்படும் பிரதான குணங்களிலொன்றாக கோபம் இருப்பதில் வியப்பொன்றுமில்லை. ஆனால், அந்தக் கோபத்தின் பின்னாலுள்ள நியாயங்களை வெளியுலகம் விளங்கிக் கொள்ளும்படியாக, கொச்சையற்ற விதத்தில் நாம் அதை வெளிப்படுத்தியிருக்கிறோமா என்று யோசித்தால், வெட்கப்படும்படியாக இருக்கிறது.

நம்முடைய நியாயம் என்பது, உள்நாட்டில் மற்றும் சர்வதேச அரங்கில், நியாயத்தின் பக்கம் நிற்க விரும்பும் நேர்மையான மற்றைய இன மக்களின் ஆதரவை பெறுவதாகவும் இருக்க வேண்டும். நம்முடைய கோபத்தில் உள்ள நியாயம், மற்றவர்களினது மனசாட்சியை சென்று உலுக்குவதாக இருக்கவேண்டும். மாறாக, அவர்களது ஆதரவுணர்வையே உலுக்கிவிடும் வன்முறை, வீராவேச கோமாளித்தனங்களாய் ஆகிவிடக்கூடாது.

இன்னல்களை ஏற்படுத்திவிடும் கோபத்தின் கெடுதி உணர்ந்தே பெரியோர் பலரும் 'கோபம் தவிர்! கோபம் தவிர்!' என்று சொல்கிறார்கள். பாரதியும் அதைப் 'பழகு' என்றுதான் சொல்கிறான். பழக்கமில்லாவிட்டால் ஏடாகூடமாய்ப் பாய்ந்துவிடும்; நம்மையும் சேர்த்தே குதறிவிடும் என்பதுதான். அதனால்தான் 'சீறுவதல்ல, ஆறுவதே சினம்' என்றிருக்கிறார்கள்.

அடுத்த வீட்டுக்காரனிலிருந்து அமெரிக்காவின் நடவடிக்கைகள் வரை நமது கோபத்துக்குத் தீனி போடப் பலப்பல உண்டு. அந்த நெருப்பினால் நாமும் நம்மோடு பிறரும் வெந்து விடாமல் பார்த்துக் கொள்ளத் தெரியவேண்டும். தனிப்பட்ட கோபமாக இருந்தாலும் சரி சமூகக் கோபமாக இருந்தாலும் சரி அதன் பாதிப்புகள் விளைவுகளை நாம் உணர்ந்திருக்க வேண்டும்.

இலக்கிய உதாரணங்களில் பார்த்தால் கூட, கோபம், அதற்கு ஆளாகியவர்களையும் அழித்து, கோபப்பட்டவர்களையும் அழித்தே அடங்கியிருக்கிறது. அப்படியொரு முதுசமாக நமக்குள் வந்திருக்கும் கோப–வன்முறை உணர்வுகளை, மனிதர்கள் இன்று அடைந்திருக்கும் நாகரிக வளர்ச்சியுடன் பொருத்தி ஆராய்ந்த பிறகே பொங்க வேண்டும். அதே பழைய 'பழிக்குப் பழி, ரத்தத்திற்கு ரத்தம்' வகையறாக்களுடன் வீர, ரோச வெறிகளைப் பொங்க விடுவது.... பத்தாயிரம் வருட நாகரிக வளர்ச்சிக்குப் பின்னான இன்றைய மனிதனுக்குரிய இயல்போ விவேகமோ அல்ல.

"போர்த் தொழில் விந்தைகள் காண்பாய், ஹே! பூதலமே" என்ற பார்த்தனின் முழக்கத்தோடு எழுந்த பாண்டவர்களின் கோபம் கௌரவர்களை மட்டும் அழித்து அடங்கிவிடவில்லை. பாண்டவர் தரப்பையும் மிச்சம் விடாமல் அழித்துவிட்டே ஓய்ந்தது என்பதே உண்மை.

"பட்டாங்கு யானுமோர் பத்தினியே யாமாகில் ஒட்டேன் அரசோடொழிப்பேன் மதுரையும்." என்று பொங்கிய கண்ணகியின் கோபம் ஒரு நகரையே அழித்துவிட்டே ஓய்ந்தது.

"உலகங்கள் வீயுமாறும் திக்குடை அண்ட கோளப் புறத்தவும் தீந்து நீரின் மொக்குளின் உடையுமாறும் காண் என முனியும் வேலை" என்று கோபத்தில் உலகை அழித்துவிடத்தான் துடிக்கிறது ராமனின் வீரமும்! "ஆராயாமல் மாயமானின் பின் சென்ற குற்றம் உங்களுடையது. குலத்துக்கே நாசம் உண்டாக்கியதில் பாதிப்பங்கு குற்றத்தை உங்களிடமே வைத்துக்கொண்டு சும்மா கோபவெறி கொள்ளுதல் தப்பு" என்று சடாயு எடுத்துரைப்பதாகக் கம்பன் பாடுகிறான். குலத்துக்கே நாசம் விளைவிக்கும் கோபத்தை யாரும் சரி என்று கொண்டாட முடியாது. அப்படிக் கொண்டாடுதல் முழுக்க முழுக்க சுயநலத்தின் பாற்பட்டதே.

கோபமும் வீரமும் வெகுமக்களின் அழிவைக் கொண்டுவருவதாக அமையும்போது, அது பாதிக்கப்பட்ட தரப்பினரின் கோபமாக இருந்தால் கூடப் பாராட்டப்பட முடியாத ஒன்றே. மக்களைக் காக்கின்ற வகையில் அந்தக் கோபத்தை ஒத்திவைப்பதோ அல்லது வேறுவழியில் சாதித்துக் கொள்வதற்கான புத்திசாலித்தனத்தைப் பிரயோகிப்பதோதான் நெஞ்சில் சமூக அக்கறை இருப்பவர்களின் எண்ணமாக இருக்கும்.

இத்தனை ஆண்டுகால மனித அறிவு வளர்ச்சியில், இந்த நிலையை வந்தடைய முடியாதவர்கள் வெறும் ஆதிமனித அழிவுகளை நிகழ்த்திக் கொண்டிருக்கும் குழுவாகவே ரோசத்தில் தீய்ந்தழிவதைத் தடுக்க முடியாமற் போகும்.

*– ஆசிரியர் –*

# ரணிலுக்கு நிகரான தலைவர்கள் ஐக்கிய தேசியக்கட்சியில் இல்லை

## விக்கிலீக்ஸ் தகவல்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்கு நிகராக அக்கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்தக்கூடிய தலைவர்கள் எவரும் அக்கட்சியில் இல்லை என விக்கிலீக்ஸ் இணையத்தளம் தெரிவித்துள்ளது

ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிராக கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்ட போதிலும், அவருக்கு நிகராக அக்கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்துவதற்கு கூடிய தலைவர்கள் எவரும் அக் கட்சியில் இல்லை என அமெரிக்கத் தூதுவராகக் கடமையாற்றிய ஜெப்ரி லன்ஸ்டட் தெரிவித்துள்ளார்.

2004ஆம் ஆண்டு மே மாதம் 24ஆம் திகதி அமெரிக்கத் தூதரகத்தினால் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட இரகசியத் தகவல் குறிப்பிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளதாக விக்கிலீக்ஸ் தெரிவித்துள்ளது

ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர்களான ஜோன் அமரதுங்க மற்றும் மிலிந்த மொரகொட ஆகியோருடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் இத்தகவல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. முன்னாள் பிரதமரும், தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்ரமசிங்கவின் முகத்தில் புன்சிரிப்பைக் காண முடியாது என ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஒருவர் விமர்சனம் செய்துள்ளார். அத்துடன், ரணில்விக்ரமசிங்க பொதுமக்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணவில்லை என மிலிந்தமொறகொடவும் குற்றம் சுமத்தியுள்ளார்

இந்நிலையில், ரணில்விக்ரமசிங்க மீது பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்ற போதிலும், அவருக்கு நிகராக அக்கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்தக்கூடிய தலைவர்கள் எவரும் அக்கட்சியில் இல்லை என அத்தகவல் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியை கரு ஜயசூரியாவிடம் வழங்க வேண்டும் என சிலர் கருத்து வெளியிட்ட போதிலும், ரணிலுக்கு நிகரான தலைவராக அவரைக் கருத முடியாது என ஜோன் அமரதுங்க அமெரிக்கத் தூதுவரிடம் தெரிவித்துள்ளார் அத்துடன், கரு ஜயசூரியாவின் தலைமைத்துவப் பண்புகள் திருப்தி கொள்ளும் வகையில் இல்லை என அமெரிக்கத் தூதுவரிடம் ஜோன்அமரதுங்க கூறியுள்ளார்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தில் மாற்றத்தை கோரும் சஜித் பிரேமதாஸ தரப்பினரும் ரணிலுக்கு பதிலாக எவரைத் தலைவராக நியமிப்பது என்பது குறித்து உறுதியான நிலைப்பாட்டை வெளியிடவில்லை. இதனிடையில், ரணிலை கட்சித் தலைமைப் பதவியிலிருந்து நீக்குவதன் மூலம் பாரிய மாற்றங்களை எதிர்பார்க்க முடியாது என அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், ஐக்கிய தேசியக் கட்சி காத்திரமான முறையில் வளர்ச்சியடைய வேண்டுமாயின் புதிய தலைமுறையினருக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என அமெரிக்கத் தூதுவராக கடமையாற்றிய ஜெப்ரி லன்ஸ்டட் இத் தகவல் குறிப்பில் தெரிவித்துள்ளார்

## சிறிகொத்தா தாக்குதலுடன் அரசாங்கத்திற்கு தொடர்பு

### மாகாண சபை உறுப்பினர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐ.தே.கட்சியின் தலைமையகமான சிறிகொத்தா மீது அண்மையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்துடன் அரசாங்கத்திற்கு தொடர்பு இருப்பதாக ஐக்கிய தேசிய கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் ரோஹன கமகே குறிப்பிட்டுள்ளார்.

கட்சி தலைமையகத்தின் மீது கற்களால் தாக்கியமை போன்று, தாக்குதல் மேற்கொள்ள பணித்தமையும் குற்றமாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தலைமையகத்துக்கு முன்பாக இருந்தவர்கள் கற்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் அல்ல எனவும், இதனுடன் தொடர்புடையவர்களை கண்டறிய சுயாதீனமான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், இத்தாக்குதல் சம்பவத்துடன் அரசாங்கத்துக்கு தொடர்பு இருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## விஷ போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது

வெளிநாடொன்றுக்கு ஏற்றுமதி செய்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படும் விஷப்போதைப்பொருள் கொண்டதான ஒரு இலட்சம் வில்லைகளை கைப்பற்றியுள்ள பொலிஸார் சந்தேக நபரொருவரையும் கைதுசெய்துள்ளனர்.

கண்டி தவுலகல ஹேந்தெனிய பிரதேசத்தில் இந்த வில்லைகள் கைப்பற்றப்பட்டதுடன் இவற்றை மிக இரகசியமாக கொண்டு சென்ற நபரையும் நேற்றுமுன்தினம் கைதுசெய்ததாக கண்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த வில்லைகளின் ஒருதொகுதி மேலதிக விசாரணைக்காக அரச பகுப்பாய்வாளருக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

இதன்போது கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் கண்டி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## சாலைப் புனரமைப்புக்கள் மழையினால் பாதிப்பு

(புதுக்குடியிருப்பு)

சில நாட்களாக தொடர்ந்து பெய்யும் மழையினால் சாலைப் புனரமைப்புப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த சனிக்கிழமை (17.12.2011) இரவு காற்றுடன் கூடிய பலத்த மழையினால் புதுக்குடியிருப்பு - பரந்தன் சாலையின் புனரமைப்பு மற்றும் பாலம் திருத்தும் வேலைகள் பாதிப்படைந்துள்ளன.

கனரக உருளைகள் மூலம் சாலை செப்பனிடப்பட்டதன் பின் கனத்த மழை காரணமாக சாலையில் பரவிய கிரவல் கற்கள் மற்றும் செம்மண் என்பன வாரடித்துப் பாய்ந்த வெள்ளத்தால், பல இடங்களிலும் சேதமடைந்து, குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. (138)

## தற்கால கவிதைகள் இலவசக் கருத்தரங்கு

(நெல்லியடி)

உயில் கலை இலக்கிய சங்கத்தின் ஏற்பாட்டில் க.பொ.த (உ/த) தமிழ்ப்பாட மாணவர்களுக்கான தற்கால கவிதைகள் என்னும் இலவசக் கருத்தரங்கு இன்று காலை 9 மணிக்கு யாழ் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழாசிரியர் த.விஷ்ணு தலைமையில் நடைபெறும் இக் கருத்தரங்கில் க.பொ.த (உ/த) பாடத்தில் அடங்கும் பாரதி முதல் குறிஞ்சி தென்னவன் வரையான தற்காலக் கவிதைகள் கருத்தரங்கு நடைபெறவுள்ளதுடன் கையேடும் இலவசமாக வழங்கப்படவுள்ளது.

இதன் வளவாளராக இ.இராஜேஸ்கண்ணன், சு.குணேஸ்வரன், செ.சுதர்சன்,சு.பௌநந்தி, வேல் நந்தகுமார் ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர். (12)

## பொறுப்பதிகாரி கைது!

பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாக சந்தேகிக்கப்படும் மொரகொல்ல பொலிஸ் காவலரணின் பொறுப்பதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

அளுத்கம பொலிஸ் நிலையத்தின் அதிகாரிகள் சந்தேகநபரை கைது செய்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் கடற்கரையில் மது போதையில் இருந்த குறித்த பெண்ணும் மேலும் இரண்டு ஆண்களும் மொரகொல்ல பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இதன்போது குறித்த பெண் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டதாக செய்யப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன மேலும் தெரிவித்துள்ளார்.

# மன்னாரில் மழை வெள்ளம் 1500 குடும்பங்கள் பாதிப்பு

(மன்னார்)


மன்னார் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்து வந்த கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளம்காரணமாக இதுவரை மன்னார் பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 1500 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் 300 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவும் மன்னார் பிரதேசச் செயலாளர் திருமதி ஸ்ராண்லி டி மேல் தெரிவித்தார்

தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக மன்னார் பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட தலைமன்னார் பியர், தலைமன்னார் கிராமம், செல்வாரி, உதயபுரம், பேசாலை, பாவிலன் பட்டான் குடியிருப்பு, முருகன் கோவில், மன்னார் உப்புக்குளம் கோந்தை பிட்டி, பள்ளிமுனை 50 வீட்டுத்திட்டம், சாந்திபுரம், பணங்கட்டிக் கோட்டு, எமிழ் நகர் போன்ற கிராமங்களில் வெள்ளம் தேங்கியுள்ளமையினால் அப்பகுதியில் உள்ள மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக மன்னார் பிரதேசச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த 300 குடும்பங்கள் அவர்களுடைய கிராமங்களில் உள்ள பொதுக் கட்டடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான அவசர உதவிகளை மன்னார் பிரதேசச் செயலகம் மேற்கொண்டு வருகின்றது.

தொடர்ந்தும் மழை நீடிக்குமாயின்மக்களின் இடப்பெயர்வுகள் அதிகரிப்பதற்கான சாத்தியக் கூறுகள்காணப்படுவதாக மன்னார் பிரதேசச் செயலாளர் திருமதி ஸ்ராண்லி டி மேல் மேலும் தெரிவித்தார்.

# யாழ். சிறைச்சாலை வீதி புனரமைக்கப்படுமா?



(யாழ்ப்பாணம்)

யாழ். சிறைச்சாலைக்கு முன்பாகக் காணப்படும் பிரதான வீதி குண்டும் குழியுமாகக் காணப்படுவதனால் வெள்ள நீர் தேங்கி நிற்கின்றது.

இதன்போது அவ்வீதியால் இரு வானங்கள் இடைமறித்துச் செல்லும்போது பின்புறமாக வரும் சைக்கிள் மோட்டார் சைக்கிளில் பயணிப்போர் குறித்த பள்ளத்திற்குள் விழும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

இவ் வீதியில் வெள்ளம் தேங்கி நிற்காது வாய்க்கால் வழியாக செல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என பொதுமக்கள் தரப்பிலிருந்து தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் பெய்த மழையினால் குறித்த வீதிப்பகுதியில் காணப்படும். பள்ளத்தில் வெள்ளநீர் தேங்கி நின்றது. இதனால் பேருந்து வண்டியை இடைவிலகிச் சென்ற வயோதிபர் சைக்கிளுடன் பள்ளத்தில் விழுந்து காயத்துடன் சென்ற சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு இவ்வீதிப் பகுதியில் வெள்ளநீர் தேங்கி சுகாதாரச் சீர்கேடாகக் காணப்படுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இவ்வீதி புனரமைப்புத் தொடர்பாக பல தடவை பத்திரிகை வாயிலாகச் சுட்டிக்காட்டப்பட்டும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே குறித்த வீதியைப் புனரமைப்பது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (எஸ்)

# உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தில் புதிய கட்டடத் திறப்பு விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி வளர்ச்சியில் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அதிக அக்கறை காட்டி வருகின்றார். இதேவேளை மாணவர்களை கல்வி ரீதியாக வளப்படுத்த பெற்றோர்களும் அக்கறையெடுத்து செயற்படவேண்டும் என நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் சந்திரகுமாரின் பிரத்தியேகச் செயலாளர் க.முருகேசு தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தில் புதிய கட்டடத்தினை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அங்கு அவர் மேலும் தெரிவிகையில், கடந்த காலங்களுடன் ஒப்பிடும் போது இன்று கிளிநொச்சி மாவட்டம் கல்வித்துறையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி நிலையை எட்டியுள்ளது. கடந்த கால போரினால் மிகுந்த பாதிப்புக்களை எதிர்கொண்டிருந்த போதும் மீள்குடியேற்றத்தின் பின்னரான காலத்தில் கல்வி வளர்ச்சியில் அனைவரும் அதிக கவனமெடுத்துச் செயற்பட்டதன் காரணத்தினாலேயே இவ் வளர்ச்சி நிலையை எட்ட முடிந்தது.

அத்தோடு நாடாளுமன்ற உறுபபினர் சந்திரகுமார் பாடசாலைகளின் பௌதீக வளங்களை மேம்படுத்துவதற்கும் கிராம மட்ட பாடசாலைகளை மேல்நிலைக்கு கொண்டு வருவதற்கும் அதிக முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். அத்தோடு இதுபோன்ற பாடசாலைகளின் வளர்ச்சிக்காக அவர் தொடந்தும் உழைக்கத் தயாராக உள்ளாரெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஜப்பான் நிப்பொன் பௌண்டேசன் நிறுவனத்தின் அனுசரணையுடன் சேவாலங்கா நிறுவனத்தினரால் அமைக்கப்பட்ட இக்கட்டடத்தின் திறப்பு விழா பாடசாலை அதிபர் திருமதி இதய சிவதாசன் மீனலோஜினியின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நிப்பொன் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் ஒனோசான்ஸ் சேவாலங்கா நிறுவனத்தின் உதவித் திட்டப்பணிப்பாளர் யோகராசா ஆகியோரும் மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# காப்பெற் வீதியில் வெள்ளம் சிரமத்துக்குள்ளாகும் மக்கள்

(குருநகர்)

ஓட்டுமடம் சென் செபஸ்தியன் வீதி மற்றும் தேவாலய வீதிகளில் மழை வெள்ளம் தேங்கி நிற்பதாக அப்பகுதிக் குடியிருப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலை மானிப்பாய் வீதி காப்பெற் போட்ட பின்பாகவே தோன்றியுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தேவாலய வீதி மற்றும் சென் செபஸ்தியன் வீதிப் பகுதி வெள்ள மழைநீர் மானிப்பாய் வீதியை ஊடறுத்து பொம்மை வெளிக்குளம், வயல் வெளிகளுக்குச் செ சல்வது தடைப்பட்டதை அடுத்தே குறிப்பிட்ட வீதிகளில் மழை வெள்ளம் தேங்கி நின்று வருவதாகப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பழைய வடிகால்கள், மதகுகள் பேணப்படாமல் புதிதாக வீதிகளை அமைத்து வருவதால் வெள்ளம் தேங்கும் புதிய பிரச்சினைகள் உருவெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (68)

## நத்தார் நிகழ்வு

யாழ்ப்பாணம் சத்தியசாயி சேவா நிலையத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு நத்தார் நிகழ்வு இடம்பெறவுள்ளது. இயேசுவின் புகழ்பாடும் பஜனைப் பாடல்களுடன் ஆரம்பமாகவுள்ள இந்நிகழ்வில் பாலவிகாஷ் மாணவர்களின் கலை நிகழ்வும், சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது.

# ஊர்காவற்றுறை பிரதேச அபிவிருத்திக்கு 7 கோடி 51 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் 2012ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவு செலவுத் திட்டத்தின் கீழ் பிரதேச அபிவிருத்திப் பணிகளுக்கென 7 கோடியே 51 இலட் சத்து 3 ஆயிரத்து 191 ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவர் ம. ஜெயகாந்தன் அறிவித்துள்ளார்.

இதன்படி பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியிலிருந்து பிரதேச சபைத் தலைமைச் செயலகத்துக்கான களஞ்சிய அறை நிர்மாணித்தல் பணிக்கு 18 இலட்சம் ரூபா நிதியும், குறித்தொதுக்கப்பட்ட மாகாண விசேட அபிவிருத்தி நன்கொடை நிதியிலிருந்து நாரந்தனை பொது நூலகத்துக்கான கட்டடம் அமைத்தல் பணிக்கு 22 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவும், ஊர்காவற்றுறை சந்தை மரக்கறி விற்பனை நிலையத்துக்கான கட்டடம் அமைத்தல் பணிக்கு 20 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

சபை நிதியிலிருந்து அனலைதீவு இந்து மயானம் புனரமைப்புப் பணிகளுக்கு 10 இலட்சம் ரூபாவும், ஊர்காவற்றுறை சென் ஜேம்ஸ் சனசமூக நிலைய புனரமைப்பு (கட்டடம் - 1) பணிக்கு 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் வடக்கு கிழக்கு உள்ளூர் சேவைகள் மேம்படுத்தல் திட்டத்தின் கீழ் (2011) நாரந்தனை செட்டியாந்தோட்ட வீதிப் புனரமைப்புக்கு 51 இலட்சத்து 89 ஆயிரத்து 941 ரூபா 97 சதமும், நாரந்தனை சூரியாவத்தை வீதிப் புனரமைப்புக்கு 92 இலட்சத்து ஆயிரத்து 285 ரூபா 44 சதமும், ஊர்காவற்றுறை முகாம் வீதிப் புனரமைப்புக்கு 67 இலட்சத்து 61 ஆயிரத்து 963 ரூபா 63 சதமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு உள்ளூர் சேவைகள் மேம்படுத்தல் திட்டத்தின் கீழ் (2012) நாரந்தனை சின்னமடு 1ஆம்,2ஆம் வீதி புனரமைப்புக்கு ஒரு கோடியே 3 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாவும், நாரந்தனை உதறாப்பிட்டி வீதிப் புனரமைப்புக்கு 97 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவும், புளியங்கூடல் வடக்கு வீதிப் புனரமைப்புக்கு 2 கோடி 57 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாவும், நாரந்தனை கணேசா பாடசாலை வீதிப் புனரமைப்புக்கு 5 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வரவு செலவுத் திட்ட அறிக்கையை பொதுமக்கள் நேற்று முதல் எதிர்வரும் 28ஆம் திகதி வரை வேலை நாட்களில் காலை 8.30 மணி முதல் 4.15 மணி வரை பிரதேச சபையின் தலைமை அலுவலகம் மற்றும் ஊர்காவற்றுறை, நாரந்தனை, அனலைதீவு, எழுவைதீவு ஆகிய உப அலுவலகங்களில் பார்வையிடலாம் எனப் பிரதேச சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.





சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி ஆசிரியர் கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அதிபர் க. அருந்தவபாலன் மங்கள விளக்கேற்றுவதையும், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர் திருமதி மகேஸ்வரி கீரத்திநாதன் உரையாற்றுவதனையும் உப அதிபர் திருமதி ஆர்.ஜே. றாஜூ, அதிபர் க. அருந்தவபாலன், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் க. விஜயவாசன், உறுப்பினர் பெ. பாலகிருஸ்ணன் மற்றும் ஆசிரியர்கள் அமர்ந்திருப்பதையும் காணலாம். (11)

## - கோவில் குளம் பகுதியில் -
# புதிய கடைத்தொகுதியை அமைக்க வவுனியா நகரசபை நடவடிக்கை

(வவுனியா)

வவுனியா நகரசபையினால் அடுத்தாண்டு கோவிற்குளத்தில் உள்ள நகரசபைக்கு சொந்தமான காணியில் பாரிய கடைத்தொகுதி அமைக்கப்படும் எனவும் அவை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யபபடும் எனவும் வவுனியா நகரசபையின் உபதலைவர் எம்.எம். ரதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

நெல்சிப் திட்டத்தின் மூலம் 44 இலட்சம் ரூபா பெறுமதியில் கோவில்குளத்தில் உள்ள காணியல் பங்குனி மாதம் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. முன்பகுதி கடைத் தொகுதியும் பின்பகுதி மீன் மற்றும் மரக்கறி சந்தையாகவும் இக்கடைத் தொகுதி அமைக்கப்படவுள்ளதாகவும் அதற்கான ஆரம்ப கட்டப்பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இவற்றுடன் 2012 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தினூடாக அடிப்படைத்தேவைகள் பல பூர்த்தி செய்யப்படவுள்ளது கெயார் நிறுவனத்தினூடாக நகரசபைக்குட்பட்ட 17 வீதிகள் கல்லிட்டு தார் பூசப்பட்டு புனரமைக்கப்படவுள்ளது. மேலும் பூந்தோட்டம் இந்து மயானத்தில் பல கோடி ரூபா பெறுமதியில் அமையப்பெற்று வரும் எரிவாயு தகனம் செய்யும் நிலையத்திற்கான வேலைகள் யாவும் பூர்த்தியாகும் நிலையில் உள்ளமையால் எதிர்வரும் ஜனவரி மாத இறுதியில் மக்களின் பாவனைக்கு திறந்து விடப்படும் எனவும் தெரிவித்தார். (125)

# சேதமடைந்துள்ள வீதியால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம்

(குருநகர்)

யாழ். கே.கே.எஸ்.வீதி சிவன் வடக்கு வீதிச் சந்தியில் அமைந்துள்ள மதகுசேதமடைந்துள்ளது.

போக்கு வரவு அதிகமாக நடைபெறும் முக்கிய வீதி நட்ட நடுமையத்தில் ஏற்பட்டுள்ள சேதம் காரணமாக இரவு பகல் வேளைகளில் விபத்துக்கள் தோன்றும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

ஓட்டை விழுந்துள்ள வீதியில் கம்பி ஒன்றில் சிவப்பு சொப்பிங் பாக் கட்டி சொருகப்பட்டுள்ளது. இரவு நேரங்களில் அதுவே விபத்துக்களை தோற்றுவிப்பதாகவும் அமைவதாக தெரிவிக்கப்படுகிறது.

வீதி அகலிப்பு வேலைகள் இப்பகுதிக்கு வருவதற்கிடையில் மேற்படி பொறிக்கிடங்கில் வாகனங்கள் முதல்மனிதர் வரை பலர் பாதிக்கப்படலாமென எச்சரிக்கை தெரிவிக்கப்படுகின்றது. (68)

# கலையுணர்வை பிரதிபலிக்கும் முகில் 2011 ஓவியக்கண்காட்சி



யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பீட சித்திரமும் வடிவமைப்பும் மாணவர்களின் முகில் ஓவியக்கண்காட்சி நேற்று முன்தினம் புதன்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இதன் அரம்ப நிகழ்வை யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் நாடாவெட்டி ஆரம்பித்து வைத்தார்.

பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்று வரும் இக்கண்காட்சியில் சித்திரமும் வடிவமைப்பும் அலகின நான்காம் வருட மாணவர்களின் கற்கையின் ஒரு பகுதியாக பல்கலைக்கழகக் கலையகத்தில் உருவாக்கப்பட்டு ஒரு குறிப்பிட்டதலைப்பின் கீழ் அமையாமல் இளம் படைப்பாளர்களின் அணுகுமுறையையும் அடையாளத்தையும பிரதி பலிப்பதனால் கலையுலக பிரவேசத்தின் முதற்படி என்ற நிலையில் இக்கண்காட்சியை முகிழ் 2011 என மாணவர்கள் பெயரிட்டுள்ளனர்.

இந்நிகழ்வில் சித்திரமும் வடிவமைப்பும் துறை இணைப்பாளர் ரி.சனாதனன், பேராசிரியர் என்.சண்முகதாஸ் பல்கலைக்கழக மாணவர்கள் ஆரம்பநிகழ்வில் கலந்து கொண்டனர். இக்கண்காட்சி யானது 24ஆம் திகதி வரை காலை 10மணி தொடக்கம் மாலை 04 மணி வரை நடைபெறவுள்ளது.

# களை கட்டுகிறது நத்தார் சவுக்கு மரங்களுக்கு கிராக்கி

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் நத்தார் பண்டிகை களைகட்டும் நிலையில் சவுக்கு மரங்களுக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

நகர்ப்பகுதியின் பல்வேறு இடங்களில் சவுக்கு மரங்கள் கிளைகளைப் பொறுத்து 150ரூபா முதல் 500ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

நத்தார் பண்டிகையை பிரதிபலிக்கும் வகையில் கிறிஸ்தவர்கள் வீடுகளிலும், தேவாலயங்களிலும் யேசுபாலகன் பிறப்பை வரவேற்கும் முகமாக சவுக்கு மரத்தில் கொலு வைப்பது வழமையுாகும்.

இதனை முன்னிட்டு வியாபாரிகள் வேறு இடங்களிலிருந்து சவுக்கு மரங்களை வெட்டி உழவு இயந்திரம் மூலம் கொண்டு வந்து விற்பனை செய்து வருவதுடன் சவுக்கு மரத்தை வீடுகளில் வளர்த்திருப்போரும் விலைக்கு விற்பனை செய்து வருகின்றனர் (21)

# வலிகிழக்கு பிரதேசத்தில் முன்னுரிமை அபிவிருத்திகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையினால் நெல்சிப் திட்டத்தின் கீழ் மக்கள் பங்களிப்புடன் முன்னெடுக்கப்படவுள்ள முன்னுரிமைப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அங்கீகாரம் வழங்கியுள்ளதால் புத்தூர் வலி கிழக்கு பிரதேசசபை செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதன்படி 5கொத்தணி ரீதியாக அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. கோப்பாய் பழைய தபாற்கந்தோர் வீதி, இலகடி வீதி, நீர்வேலி, வேவிபுரம் போயிட்டி குறுக்கு வீதி, கலை ஒளி வீதி, மாலை வைரவர் வீதி, உரும்பிராய் வாகையடி வீதி, மயான வீதி, அச்சுவேலி பைற்றோலை வீதி, கரதடி வீதி, சூசையப்பர் வீதி, புத்தூர் சங்க வீதி ஆகிய வீதிகளின் அபிவிருத்தித் திட்டங்கள் மக்களால் முன்னுரிமை அடிப்படையில் இனங்காணப்பட்டு அவை வலி கிழக்குப் பிரதேசச் செயலகத்தில் கடந்த ஏப்பிரல் மாதம் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அனுமதி பெறும்பொருட்டு சமர்ப்பிக்கப் பட்டது.

இதன் பின்னர் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை செயலாளர் திருமதி ஜேந்தா சோமராஜ், அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவிடம் கடந்த ஜூன் மாதம் 20 திகதி மேற்படி வேலைத்திட்டங்களை அங்கீகரிக்கக்கோரி கடிதம் ஒன்றை அனுப்பினார். இதனை அடுத்து அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்ட வீதிகளை புனரமைக்க அமைச்சர அங்கீகாரம் வழங்கியுள்ளார்

வீதிகளின் புனரமைப்பு வேலைகள் இடம்பெற இருக்கும் நிலையில் வலிகிழக்கு பிரதேச சபை தவிசாளர் மேற்படி வீதிகள் தனது அங்கீகாரத்துடனேயே புனரமைக்கப்படவுள்ளதாக கூறிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (135)


# கற்கை நெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

( கிளிநொச்சி )

தேசிய பயிலுனர் கைத்தொழிற்பயிற்சி அதிகார சபையினால் (NATIA) கிளிநொச்சி மாவட்டத்தில் நடாத்தப்படும் கற்கைநெறிகளில் வீட்டு மின்னிணைப்பு நீர்க்குழாய் பொருத்துதல், குளிரூட்டி திருத்துதல், தாதி உதவியாளர், கணினிக் கற்கை அனுமதிப்பத்திரம் ஆகிய கற்கைநெறிகளுக்கான புதிய பிரிவுகள் எதிர்வரும் ஜனவரி மாதம் 02 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கு தகுதிவாய்ந்த ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் தங்களது சுயவிபரம் அடங்கிய விண்ணப்பங்களை தேசிய பயிலுனர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, மாவட்ட அலுவலகம், ஆனந்தபுரம், கிளிநொச்சி என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ எதிர்வரும் 30ஆம் திகதிக்குமுன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைக்குமாறும் மேலதிக தொடர்புகளுக்கு 0343942824 / 0212285615 என்னும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு சபையின் கிளிநொச்சி மாவட்ட முகாமையாளர் தெரிவித்துள்ளார்.



கோண்டாவில் வடக்கு கலைவாணி சனசமூக நிலையத்திற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து 50 ரூபா ஆயிரம் பெறுமதியான தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சனசமூக நிலையத்தில் வைத்து நல்லூர் பிரதேசசபை எதிர்க்கட்சித் தலை வரும், பிரதேச ஈ.பி.டி.பி அமைப்பாளருமான அ.இரவீந்திரதாசன் சனசமூக நிலையசெயலாளர் ஜெயானந்த ராசாவிடம் அவற்றை கையளிப்பதை காணலாம்.

# மீள் குடியமர்ந்த மக்களுக்கு கட்டடப்பொருட்கள் வழங்கல்



(வவுனியா)

வவுனியா, சாளம்பைக்குளத்தில் மீள்குடியேறிய மக்களுக்கு வீட்டுத்திட்டத்தினை மேற்கொள்வதற்காக பொருளுதவித்திட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை சாளம்பைக் குளத்தில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ் தலைமையில் இடம் பெற்றது.

யுத்தம் காரணமாக 90களில் வவுனியா சாளம்பைக்குளத்தில் இருந்து இடம்பெயர்ந்து பல பகுதிகளிலும் வசித்து வந்தவர்கள் மீள 2009ஆம் ஆண்டு தமது சொந்தக் கிராமத்தில் குடியேற்றப்பட்ட நிலையில் தற்காலிக கொட்டகைகள் அமைத்து வாழ்ந்தனர் இவர்களுக்கு ஐக்கியநாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தினால் வீட்டுத்திட்டத்தை மேற்கொள்வதற்காக கட்டடப்பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர், ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் வதிவிடப்பிரதிநிதி உட்பட பலர் கலந்து கொண்டனர். (125)

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

**21.12.2011 - 16.12.2014** ஜோதிடமாமணி முருகு பாலமுருகன்



## மகரம்

உத்திராடம் 2,3,4ஆம் பாதங்கள்
திருவோணம், அவிட்டம்
1,2ஆம் பாதங்கள்

கஷ்டப்படுபவர்களுக்கு ஆறுதலாகவும் நண்பர்களிடமும் விரோதிகளிடமும் சமமாகப் பழகக்கூடிய தன்மை கொண்டவராகவும் விளங்கும் மகரராசி நேயர்களே! உங்கள் ராசியாதிபதி சனிபகவான் வரும் 21-12-2011 முதல் 16-12-2014 வரை ஜீவன ஸ்தானமான 10ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்யவுள்ளார். இது தொழில் உத்தியோக ரீதியாக அவ்வளவு நற்பலனை ஏற்படுத்தும் என்று கூற முடியாது. எடுக்கும் காரியங்களில் எதிர் நீச்சல் போட வேண்டியிருக்கும். தொழிலாளர்களால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படும். அரசு வழியில் எதிர்பார்க்கும் உதவிகள் தடைதாமதங்களுக்குப் பிறகே கிடைக்கும். கூட்டாளிகளை அனுசரித்து நடந்து கொண்டால் மட்டுமே அபிவிருத்தியைப் பெருக்கவும் போட்டி பொறாமைகளைச் சமாளிக்கவும் முடியும். உத்தியோகத்திலிருப்பவர்கள் உயரதிகாரிகளிடம் பேசும் போது மிகவும் கவனமுடன் செயற்படுவது நல்லது. சிலருக்குப் பணி நிமிர்த்தம் காரணமாக எதிர்பாராத இடமாற்றங்கள் ஏற்பட்டு குடும்பத்தைப் பிரியக்கூடிய சூழ்நிலையும் உண்டாகும். சனி உங்கள் ராசியாதிபதி என்பதால் எதையும் சமாளிக்கும் ஆற்றலை உண்டாக்குவார். சனி 10ஆம் வீட்டில் சஞ்சரிக்கும் இக்காலங்களில் 17-05-2012 வரை சுகஸ்தானமான 4ஆம் வீட்டில் குருபகவான் சஞ்சாரம் செய்வதால் தேவையற்ற அலைச்சல் டென்ஷன் அ சையும், அசையா சொத்துக்களால் வீண் விரயங்கள் இருந்தும் அனுபவிக்க முடியாதபடி சுகவாழ்வில தடை ஏற்படும். 17-05-2012 முதல் 28-05-2013 வரை குரு பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சாரம் செய்வதால் உங்களுக்குள்ள பிரச்சினைகள் படிப்படியாகக் குறையும். குடும்பத்தில் சுபீட்சம் மங்களகரமான சுபகாரியங்கள் கைகூடும் வாய்ப்பு, பூர்வீக சொத்துகளால் அனுகூலம் புத்திர வழியில் மகிழ்ச்சி ஏற்படும். 28-05-2013 முதல் 13-06-2014 வரை குணரோக ஸ்தானமான 6ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்யவிருப்பதால் உடல் ஆரோக்கியத்தில் பாதிப்பு, தேவையற்ற வம்பு வழக்குகள், மறைமுக எதிர்ப்புகள் யாவும் ஏற்பட்டு மன நிம்மதி குறையும். 28-05-2013 முதல் 13-06-2014 வரை குரு சமச்சப்தம ஸ்தானமான 7இல் உச்சம் பெற்று சஞ்சாரம் செய்யவிருப்பதால் பொருளாதார நிலை மிகச் சிறப்பாக அமையும். கூட்டுத்தொழில் செய்பவர்களுக்கு லாபமும் அபிவிருத்தியும் பெருகும். கணவன், மனைவியரிடையே ஒற்றுமை பலப்படும். பிரிந்து சென்ற உறவினர்களும் தேடிவந்து நட்புக்கரம் நீட்டுவார்கள். நண்பர்களாலும் அனுகூலம் உண்டாகும்.

### தேக ஆரோக்கியம்

உடல் ஆரோக்கியம் ஓரளவுக்கு சிறப்பாகவே அமையும். அவ்வப்போது சோர்வு, மந்தநிலை ஏற்பட்டாலும் அன்றாட பணிகளில் ஈடுபடுவதில் எந்தச் சிக்கலும் இருக்கும். தொழில் வியாபாரம், உத்தியோகம் செய்பவர்களுக்குத் தேவையற்ற அலைச்சல்களும் அதனால் மனநிம்மதி குறைவும் உண்டாகக்கூடிய காலம் என்பதால் எதிலும் கவனம் தேவை.

### குடும்ப பொருளாதார நிலை

குடும்ப ஒற்றுமை சிறப்பாக இருக்கும். பண வரவுகளும் தேவைக்கேற்றபடி இருப்பதால் குடும்ப தேவைகளும் பூர்த்தியாகும். திருமண சுபகாரியங்களுக்கான முயற்சிகளில் சிறுசிறு தடைகளுக்குப் பின் வெற்றி கிட்டும். உற்றார், உறவினர்களை அனுசரித்து நடந்து கொள்வது நற்பலனை உண்டாக்கும். கணவன், மனைவியிடையே வீண் வாக்குவாதங்கள் தோன்றினாலும் ஒற்றுமை குறையாது. பொன், பொருள் சேரும். குரு பலம் பெற்றிருக்கும். காலங்களில் வீடுமனை வாங்குவதற்கான யோகமும் உண்டாகும். முடிந்தவரை பிறர் விஷயங்களில் தலையீடு செய்வதை தவிர்ப்பது நல்லது. சிக்கனத்தை கையாளவும்.

### உத்தியோகத்தர்களுக்கு

பணி புரிபவர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் செயற்படுவது மிகவும் நல்லது. பிறர் செய்யக்கூடிய தவறுகளுக்காக நீங்கள் அவமானப் படுவீர்கள். வேலைப்பளுவும் அதிகரிக்கும். உடல்நலக்குறைவுகளாலும் அடிக்கடி விடுப்பு எடுக்க வேண்டிய சூழ்நிலைகளாலும் உயரதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாவீர்கள். சிலருக்கு எதிர்பாராத இடமாற்றங்கள் ஏற்பட்டு குடும்பத்தை விட்டு பிரிய நேரிடும். புதிய வேலை தேடுபவர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பு அமையும்.

### வியாபாரிகளுக்கு

தொழில் வியாபாரம் செய்பவர்கள் எந்தவொரு காரியத்திலும் மிகவும் நிதானமாகச் செயற்படுவது நல்லது. புதிய முயற்சிகளில் வீண் விரயங்களைச் சந்திக்க நேரிடும். வெளியூர் வெளிநாட்டுத் தொடர்புடையவற்றை குறித்த நேரத்தில் கொடுக்கத் தவறுவதால் ஆர்டர்கள் கை நழுவிப் போகும். உடனிருப்பவர்களே போட்டிகளாக மாறுவார்கள். நவீன கருவிகள் பழுதாவதாலும் வீண் செலவுகள் ஏற்படும். முதலாளி தொழிலாளி என்ற பாகுபாடு அதிகரிப்பதால் தொழிலில் நிலுவை நிலை உண்டாகும். பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது.

### அரசியல் வாதிகளுக்கு

அரசியல் வாதிகளுக்கு உடனிருப்பவர்களே துரோகிகளாக மாறுவார்கள். கட்சி விட்டு கட்சி தாவக்கூடிய சூழ்நிலைகளும் உருவாகும். எடுக்கும் காரியங்களில் மறைமுக எதிர்ப்புகள் அதிகரிப்பதால் எந்தவொரு காரியத்தையும் செய்து முடிக்க முடியாமல் போகும். வருவாய்களிலும் நெருக்கடிகள் நிலவுவதால் கட்சிப் பணக்காக செலவு செய்ய முடியாமல் போகும்.

### விவசாயிகளுக்கு

விவசாயிகள் நல்ல அறுவடையைப் பெற அதிகம் பாடுபட வேண்டியிருக்கும். புழுப் பூச்சிகளின் தொல்லைகளால் வீண் விரயங்கள் ஏற்படும். அரசு வழியில் எதிர்பார்க்கும் உதவிகளும் சற்று தாமதப்படும். உற்றார் உறவினர்களின் ஆதரவுகளால் ஓரளவுக்கு எதையும் சமாளிக்கும் ஆற்றல் உண்டாகும்.

### பெண்களுக்கு

உடல் ஆரோக்கியம் சிறப்பாகவே இருக்கும். செய்யும் பணிகளில் சற்று மந்த நிலை ஏற்பட்டாலும் செய்ய வேண்டிய நேரத்தில் செய்து முடிப்பீர்கள். பண வரவுகள் ஏற்றத்தாழ்வுடன் அமைந்தாலும் குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யுமளவிற்கு இருக்கும். திருமண சுபகாரியங்கள் நடைபெற்று குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உற்றார், உறவினர்களின் ஆதரவுகள் ஓரளவுக்கு அனுகூல பலனை உண்டாக்கும். பணிபுரியும் பெண்கள் பணியில் பல நெருக்கடிகளைச் சந்திக்கக்கூடும் என்பதால் கவனம் தேவை.


### மாணவர்களுக்கு

கல்வி பயிலும் மாணவர்கள் கல்வியில் சற்று கவனமுடன் செயற்பட்டால் நினைத்த மதிப்பெண்களைப் பெற முடியும். கல்வி ரீதியாக எடுக்கும் முயற்சிகளில் சிறு சிறு நெருக்கடிகள் நிலவினாலும் எதையும் சமாளித்து ஏற்றம் பெறுவீர்கள். மந்த நிலை ஞாபக மறதி போன்றவற்றாலும் சில நேரங்களில் பாதிக்கப்படுவீர்கள். நட்புகளிடம் கவனம் தேவை.

---

**கே.எஸ். ஆனந்தன் வெற்றிக் கிண்ணக் கிரிக்கெட்**

# சமநிலையில் நிறைவு



யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரி அணியினர்

(யாழ்ப்பாணம்)

யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரிக்கும் கோட்டே ஸ்ரீ ஜயவர்தனபுர வித்தியாலய அணிக்கும் இடையிலான கே.எஸ். ஆனந்தன் கிண்ண இருநாள் வருடாந்த கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

முப்பது வருடங்களுக்குப் பின் இவ்விரு பாடசாலைகளுக்குமிடையிலான வருடாந்த கிரிக்கெட் போட்டி இவ்வருடம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஸ்ரீ ஜயவர்தனபுர வித்தியாலயத்தின் புகழ் பெற்ற பழைய மாணவர்களில் ஒருவரான கே.எஸ். ஆனந்தனின் பெயர் இச்சம்பியன் கிண்ணத்திற்கு சூட்டப்பட்டுள்ளது.

ஸ்ரீ ஜயவர்தனபுர வித்தியாலய மைதானத்தில் கடந்த திங்கள், செவ்வாய் தினங்களில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென் ஜோன்ஸ கல்லூரி 195 ஓட்டங்களைப் பெறறது. இதில் மகேஸ்வரன் விந்தராகன் 40 ஓட்டங்களையும் பேரின்பராஜா பிரிந்தாபன் 35 ஓட்டங்களையும் அலி அக்பர் சன்சஜன் 32 ஓட்டங்களையும் சஜீந்திரன் கபிலராஜ் 24 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் தரிந்து ஹேஷான் 67 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளையும் என். நதீர 53 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்ரீ ஜயவர்தனபுர வித்தியால அணி 191 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணியின் சார்பில் சாமிக சில்வா 32 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் பேரின்பராஜா பிருந்தாபன் 58 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பரமநாதன் துவாரகசீலன் 20 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் தேவராஜா சஜான் 21 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இரண்டாவது நாள் ஆட்டத்தில், சென். ஜோன்ஸ் அணி தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்தது. அவ்வணி 3 விக்கெட் இழப்பிற்கு 148 ஓட்டங்களைப் பெற்றபோது இப் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

---

# அரச ஊழியர் வலைப்பந்தாட்டம் யாழ். மாவட்ட அணி சம்பியன்

விளையாட்டுச் செய்திகள்

(றொறிங்டன்)

அரச ஊழியர்களுக்கிடையே இடம்பெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்ட அரச ஊழியர்கள் அணி தேசிய மட்டத்தில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு றொறிங்டன் விளையாட்டு மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இப்போட்டியில் யாழ். மாவட்ட அரச ஊழியர் அணியை எதிர்த்து கம்பஹா மாவட்ட நீதி மன்ற ஊழியர்கள் அணி விளையாடியது.

முதல் பாதி ஆட்டத்தில் 13- 03 புள்ளிகள் பெற்று யாழ். மாவட்ட அரச ஊழியர் கள் அணி முன்னணியிலிருந்த போது ஆட்டம் முடிவுற்றது.

இரண்டாம் பாதி ஆட்டத்திலும் யாழ். மாவட்ட அணி 12-02 புள்ளிகள் பெற்ற நிலையில் இரண்டாவது பாதி ஆட்டம் முடிவுற்றது.

ஆட்ட நிறைவில் யாழ். மாவட்ட அரச ஊழியர்கள் அணி 25- 05 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

---

# வென்றது ஜெனியன்ஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்பட்டுவரும் மாவட்ட மட்டத்திலான கூடைப்பந்தாட்டப் போட்டி ஒன்றில் ஜெனியன்ஸ் அணி அபார வெற்றிபெற்றது.

யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்ட மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இப்போட்டியில் சென்றல் அணியை எதிர்த்து ஜெனியன்ஸ் அணி மோதியது.

இதில் ஜெனியன்ஸ் அணி 67-31 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

மற்றுமொரு போட்டியில் கே.சி.சி.சி. சிவப்பு அணியும், கோப்பாய் அணியும் மோதின. இதில் கோப்பாய் அணி 41-16 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

இப்போட்டியின் முதல் சுற்று ஆட்டங்கள் லீக் முறையில் நடைபெற்று வருவதாகவும், இரண்டாவது சுற்று ஆட்டங்கள் விலகல் முறையில் நடைபெறவுள்ளதாகவும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (93)

---

# சதுரங்கச் சுற்றில் வெற்றிபெற்றோர்

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் வலிகாமம் பிரதேசத்திற்குட்பட்ட பிரதேச செயலகங்களுக்கிடையே நட்புறவு வெற்றிக் கிண்ணத்திற்கான சதுரங்கச் சுற்றுப்போட்டியும் கரம் சுற்றுப் போட்டியும் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் சதுரங்கப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விபரங்கள் வருமாறு:-

முதலாமிடம் சி.வல்லவக்குமரன் (தெல்லிப்பளை பிரதேச செயலகம்), இரண்டாமிடம் - ப.வசிகரன் (யாழ்ப்பாணம் பிரதேச செயலகம்), மூன்றாமிடம் - தே.ஜெயானந்தன் (சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்)

# தொடரை வென்றது பாக்.

(டாக்கா)

பங்களாதேஷுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் 7 விக்கெட்டுக்களால் வென்ற பாகிஸ்தான் அணி இரு அணிகளுக்குமிடையிலான டெஸ்ட் தொடரை 2 - 0 என்ற கணக்கில் இலகுவாக கைப்பற்றிக் கொண்டது.

மிர்பூரில் நடைபெற்ற போட்டியில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய பங்களாதேஷ் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 234 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 103 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஆடிய பாகிஸ்தான் அணி 20.5 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 107 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. மொஹமட் ஹபீஸ் 47 ஓட்டங்களை பெற்றார். பங்களாதேஷ் முதல் இனிங்ஸ் 338, பாகிஸ்தான் முதல் இனிங்ஸ் 470.

போட்டியின் ஆட்டநாயனாக ஷகிப் அல் ஹசனும், தொடர் நாயகனாக யுனிஸ்கானும் தெரிவாகினர்.

## வோனுக்கும் சிலை




(மெல்போர்ன்)

மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்திற்கு வெளியே அவுஸ்ரேலிய சுழற்பந்து மேதை ஷேன் வோர்னின் வெண்கலச் சிலை நேற்று திறக்கப்பட்டது.

ஏற்கனவே இதற்கு முன் 10 அவுஸ்ரேலிய விளையாட்டு நட்சத்திரங்களுக்கு சிலைகள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. டொன் பிரட்மன், கீத் மில்லர், பில் போனஸ்'.போர்ட், டெனிஸ் லில்லி ஆகியோருடன் ஷேன் வோர்ன் சிலையும் தற்போது சேர்ந்துள்ளது.

இதே மைதானத்தில் ஷேன் வோர்ன் தனது 700ஆவது விக்கெட்டையும் டெஸ்ட் வாழ்வில் ஒரே ஹட்ரிக்கையும் எடுத்து சாதனை புரிந்தார். டெஸ்ட் கிரிக்கெட்டில் 708 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய ஷேன் வோர்ன் ஒரு நாள் போட்டிகளில் 293 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்.

## முதல் டெஸ்ட் போட்டிக்கான அவுஸ்ரேலிய அணி அறிவிப்பு

(மெல்போர்ன்)

இந்திய அணியுடன் முதல் டெஸ்டில் மோதவுள்ள அவுஸ்ரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. பிலிப் ஹியூஸ், உஸ்மான் கவாஜா அதிரடியாக நீக்கப்பட்டு எட் கோவன், ஷோன் மார்ஷ் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய, அவுஸ்ரேலிய அணிகளிடையே 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடக்கவுள்ளது. முதல் டெஸ்ட் மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்தில் 26ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.. இந்த போட்டிக்கான அவுஸ்ரேலிய அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

அணி விபரம் : மைக்கல் கிளார்க் (கப்டன்), எட்வர்ட் கோவன், டேவிட் வோர்னர், ஷோன் மார்ஷ், ரிக்கி பொன்டிங், மைக்கல் ஹஸி, டனியல் கிறிஸ்டியன், பிராட் ஹாடின், பீற்றர் சிடில், ஜேம்ஸ் பட்டின்சன், பென் ஹில்பென்ஹாஸ், மிடசெல் ஸ்டார்க், நாதன் லியான்.

## அதிகளவு ரசிகர்கள் வருவரென நம்பிக்கை

(மெல்போர்ன்)

மெல்போர்ன் மைதானத்தில் நடைபெறவுள்ள இந்திய, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியை நேரில் காண அதிகளவிலான ரசிகர்கள் வருவார்கள் என அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை செய்தி தொடர்பாளர் பீட்டர்யங் தெரிவித்துள்ளார்.

உலகின் சிறந்த மைதானமாக மெல்போர்ன் திகழ்கிறது. சீட் இருக்கைகள் பிரமாதமாக இருக்கும்.

போட்டியை பார்ப்பதில் அதிக ஆர்வமும் இருக்கும். ரசிகர்கள் இந்தப்போட்டியை காண அதிக ஆர்வத்தில் உள்ளனர். நாங்கள் எதிர்பார்த்ததை விட டிக்கெட் விற்பனை அதிகமாக உள்ளது.

இந்தப் போட்டி தொடங்குவதில் மழையால் பாதிக்கப்படவும் வாய்ப்பு உள்ளது. எனினும் ரசிகர்களின் வரவு அதிகமாகவே இருக்கும் எனத் தெரிவித்தார்.

## அவுஸ்ரேலிய கிரான்ட்ஸ்லாம் வீனஸ் பங்குபெறுவது சந்தேகம்

உலகின் முன்னாள் முதல்நிலை ரென்னிஸ் வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ் 2012ஆம் ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் போட்டியான அவுஸ்ரேலிய ஓப்பனில் பங்கேற்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

நியூசிலாந்தில் நடைபெறும் ஏ.எஸ்.பி. கிளாசிக் ரென்னிஸ் போட்டியில் பங்கேற்கவிருந்த வீனஸ் வில்லியம்ஸ் சுகவீனம் காரணமாக அந்தப் போட்டியில் இருந்து விலகிக் கொண்டார். இதனைத் தொடர்ந்தே அவர் ஆஸி. ஓப்பனில் பங்கேற்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.



31 வய்தான வீனஸ் வில்லியம்ஸ் இந்த ஆண்டில் சுகவீனம் காரணமாக 11 போட்டிகளில் மாத்திரமே விளையாடியுள்ளார். கடந்த ஒகஸ்டில் நடந்த அமெரிக்க ஓப்பனில் அவர் இரண்டாவது சுற்றுடன் விலகிக் கொண்டார். இதனால் அவர் தற்போது உலக தரவரிசையில் 102 ஆவது இடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

## பெயருக்கு களங்கமேற்படுத்தும் குற்றச்சாட்டு



எனது பெயருக்கும், புகழுக்கும் களங்கம் ஏற்படுத்தும் வகையில் சூதாட்ட குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதை மறுப்பதோடு இதற்கு கண்டனமும் தெரிவிக்கிறேன். அவதூறு ஏற்படுத்தும் வகையில் எனது பெயர் வெளியிடப்பட்டுள்ளது என இலங்கை அணியின் முன்னாள் கப்டன் ரணதுங்க தெரிவித்துள்ளார். இலங்கை நாடாளுமன்றத்தில் சமீபத்தில் ஒரு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அதில் ரணதுங்கா இந்திய சூதாட்ட தரகரிடம் ரூ.75 லட்சம் பணம் பெற்றுக் கொண்டு ஆட்'டத்தை பிக்சிங்(சூதாட்டம்) செய்ததாக தெரிவிக்கப்பட்டது. இந்த சூதாட்ட குற்றச்சாட்டை ரணதுங்கா மறுத்துள்ளார்.

## பொண்டிங்கின் புதிய அத்தியாயம்



(கான்பெரா)

இந்திய அணிக்கு எதிரான தொடருக்கு பின்னர் ரிக்கி பொண்டிங் புதிய அத்தியாயம் தொடங்குவார் என நான் எதிர்பார்கின்றேன் என்று ராகுல் ராவிட் தெரிவித்துள்ளார்.


ரிக்கி பொண்டிங் இன்னும் சிறந்த வீரர் என்று நான் நினைக்கிறேன். கடந்த முறை அவர் இந்தியப் பயணத்தில் ஆடியதை பார்க்கையில் இன்னும் அவர் சிறந்த அவுஸ்ரேலியத் துடுப்பாட்ட வீரர் என்று சொல்லலாம். இந்திய அணிக்கு எதிரான தொடருக்கு பின்னர் அவருக்கு புதிய அத்தியாயம் தொடங்கும் என்று நான் நினைக்கிறேன். அவர அபாயகரமான பேட்ஸ்மேன் என்பதில் இன்னும் எந்தவித சந்தேகமும் இல்லை என்று தெரிவித்தார்.

## முப்பாய்ச்சல் வீரருக்கு ஒரு வருடத் தடை விதிப்பு

(பரீஸ்)

தடகள வீராங்கனை ஒருவருடன் மோதலில் ஈடுபட்ட பிரான்ஸ் நாட்டு முப்பாய்ச்சல் வீரர் டெட்டி டெம்கொவுக்கு அந்நாட்டு தடகள சம்மேளனம் [illegible] வருடத் தடை விதித்துள்ளது.

22 வயதான டெம் கோவுக் உள்ளக தடகள போட்டியின் முப்பாய்ச்சலில் 17.92 மீற்றர் தூரம் பாய்ந்து உலக சாதனை படைத்துள்ளார். எனினும் அவருக்கு ஓர் ஆண்டு போட்டித் தடை விதிக்கப்பட்டுள்ளதால் வரும் மார்ச் மாதம் ஸ்தன்பூலில் நடை பெறவுள்ள உலக உள்ளக தடகள போட்டியில் தனது சம்பியன் பட்டத்தைத் தக்க வைத்துக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.



எனினும் டெம்கோவுக் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள லண்டன் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## களத்தடுப்புத் தவறு மன்னிப்பு இல்லை


(டாக்கா)

பங்களாதேஷ் கிரிக்கெட் வீரர்களின் களத்தடுப்பு தவறுகளுக்கு மன்னிப்பு வழங்க முடியாதென அந்த அணியின் பயிற்றுவிப்பாளர் ஸ்ரூவோட் லோ தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அணிக்கெதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளின் போது பங்களாதேஷ் வீரர்கள் பிடிகளை தவறவிட்டமை குறித்து ஸ்ரூவோட் லோ அதிப்தி வெளியிட்டுள்ளார்.

முக்கிய வீரர்களின் பிடிகளை வீரர்கள் தவறவிடும் பட்சத்தில் அணிக்கு அது பின்னடைவை ஏற்படுத்தும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை பாகிஸ்தான் அணிக்



கெதி ரான டெஸ்ட் கிரிக்கெட் தொடரை பங்களாதேஷ் அணி இழந்துள்ளமைக்கு இவ்வாறான தவறுகளே காரணம் எனவும் அவர் தெரிவித்தார்.

## ஆஸியின் வேகங்களால் இந்தியாவுக்கு நெருக்கடி



(சிட்னி)

அவுஸ்ரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர்களின் மூலம் இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர்களுக்குப் பாரிய சாவல் காத்திருக்கின்றது என அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் கப்டன் மார்க் டெய்லர் தெரிவித்துள்ளார்.

டெண்டுல்கர் நீங்கலாக ராவிட், லக்ஸ்மன், சேவாக் அனைவருமே அவுஸ்ரேலியாவுக்கு எதிராக சிறப்பான ஆட்டத்தை இதுவரை வெளிப்படுத்தியே வந்தனர். அவர்கள் சிறந்த வீரர்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் அவுஸ்ரேலியாவின் இளம் வேகத்திற்கு எதிராக ,அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப் பொறுத்திருந்து பார்க்கவேண்டும்.

பொண்டிங், ஹஸி ஆகியோர் சமீப காலங்களில் எதிர்கொண்ட சவாலான பந்து வீச்சை இந்திய பெருந்தலைகள் சமீபத்தில் எதிர்கொண்டதாகத் தெரியவில்லை. இந்திய வீரர்கள் சொந்த நாட்டின் ஸ்விங் இல்லாத, பந்து கள் எழும்பாத வேகமற்ற ஆட்டக்களங்களில் ஆடி வந்தனர். இது இந்திய வீரர்களுக்கு சவாலாக இருக்கும், அதே வேளையில் அவுஸ்ரேலிய பந்து வீச்சாளர்களுக்கும் பெரிய சவாலாகவே இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

## கிரிக்கெட் உலகில் சச்சினே சிறந்தவர்

(சிட்னி)

கிரிக்கெட் வரலாற்றில் பிராட்மன் மட்டுமல்ல எந்த ஒரு வீரரை விடவும் சச்சின் டெண்டுல்கரே தலை சிறந்த துடுப்பாட்ட வீரர் என்பதை புள்ளிவிபரங்கள் கொண்டு தன்னால் நிரூபிக்க முடியும் என்று கூறுகிறார் அவுஸ்ரேலியாவில் உள்ள கிரி.'. பித் பல்கலைக் கழக ஆய்வாளர் டாக்டர். நிகோலஸ் ரோடி.

சில பொருளாதார ஆய்வுக் கோட்பாடுகளின் அடிப்படையில் எந்த ஒரு காலத்தில் விளைடிய ஒருவரையும் நடப்பு வீரர்களுடன் ஒப்பிட்டு அறுதியிட முடியும் என்கிறார் இந்தப் பேராசிரியர். கிரிக்கெட் ஆட்டத்தின் மீது தனக்குள்ள பிடிப்பே இது போன்ற கணக்கீடுகளை உருவாக்கி புதிய தரவரிசை நிலையை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தை தனக்கு ஏற்படுத்தியதாக ரோடி தெரிவித்தார்.

எந்த ஒரு தரநிலையும் துல்லியம் கிடையாது. அது சற்று சீரியசாகவும் இருக்கும் விளையாட்டுத் தனமாகவும் இருக்கும்.

ஆனால் தனக்கு எப்பவும் கிரிக்கெட்டையும், பொருளாதாரத்தையும் கலப்பது பிடிக்கும் என்று கூறுகிறார் இவர். என்னுடைய உண்மையான உணர்வு என்னவெனில் பிராட்மன் மீது எமக்கு உள்ள பக்தி இந்திய மேதைக்குச் சற்றே பின்னடைவு ஏற்படுத்தியுள்ளது. என்னுடைய சொந்த கருத்தைக் கேட்டால் அதாவது யார் சிறந்த டெஸ்ட் துடுப்பாட்ட வீரர் சச்சினா, பிராட்மனா என்றால் நான் அவ்வளவு எளிதில் பிராடமன் என்று கூறிவிடமாட்டேன், இருவரும் என்னைப் பொருத்தவரை நெருக்கமாகவே இருக்கிறார்கள் என்கிறார் ரோடி.

## விலகினார் சாய்னா



(க்னோ)

சையத் மோடி சர்வதேச கிராண்ட் பிரீ பட்மின்ரன் போட்டியில் இருந்து முதல் நிலை வீராங்கனை சாய்னா நெஹ்வால் காயம் காரணமாக விலகினார்.

தனது முதல் சுற்றுப் போட்டியில் சீனதைபே வீராங்கனை பாய் சுவோமாவுடன் நேற்று மோத இருந்த நிலையில் சாய்னா விலகியது இந்திய ரசிகர்களை ஏமாற்றமடையச் செய்தது. தசைப்பிடிப்பு ஏற்பட்டதுடன் சளித் தொந்தரவு மற்றும் லேசான காய்ச்சலால் அவதிப்பட்டதால் சாய்னா விலக நேரிட்டதாக உ.பி. பேட்மின்டன் சங்க பொதுச் செயலர் விஜய் சின்கா தெரிவித்தார்.

# இலங்கையில் யுத்தம் அற்ற சமூகத்தையே விரும்புகிறோம்

## இலங்கைக்கான ஜேர்மனியத் தூதுவர்

(கொழும்பு)

இலங்கையில் பல வருடங்களாக நடைபெற்ற யுத்தம் பல உயிரிழப்புக்களையும் பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. தற்போது யுத்தம் முடிந்து நல்லதொரு எதிர்காலம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலை தொடர வேண்டும் என்பதையே ஜேர்மன் விரும்புகின்றது என இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் எச்.இ. ஜென்ஸ் புளோட்னர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் தன்னாமுனை மியான்மி மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இளைஞர், யுவதிகளுக்குத் தொழிற் பயிற்சி ஊடாக சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் செயற்றிட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற ஒரு தொகுதி இளைஞர் யுவதிகளுக்கு சான்றிதழ் மற்றும் தொழில் உபகரணம் வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு அவர் மேலும் உரையாற்றுகையில்,

பல வருடங்களாக நடைபெற்ற யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் எவ்வளவு சிரமங்களை எதிர்கொண்டிருப்பார்கள். உறவினர்களை இழந்திருப்பார்கள் இது போன்றதொரு செயற்பாடு இனி ஒரு காலத்தில் இடம்பெறக்கூடாது என்றே விரும்புகிறோம்.

இளைஞர், யுவதிகளுக்கு தொழில் பயிற்சியினை வழங்கும் இந்தத்திட்டத்தினை இந்த நோக்கத்தின் அடிப்படையிலேயே ஜேர்மன் அரசாங்கம் செய்து வருகிறது.

அதனை உங்களைப் போன்ற பயிற்சிகளைப் பெற்ற இளைஞர்கள் திறமையாகச் செயற்படும் போதுதான் வெற்றிகரமானதாக நிறைவடையும் இறந்தவர்களை நாம் ஒன்றும் செய்து விட முடியாது. ஆனால் உயிருடன் இருப்பவர்களை மேம்படுத்தலாம. அந்த நோக்கம் கருதியே எமது அரசாங்கம் நிதியுதவியைச் செய்கிறது. இந்தத் திட்டத்தின் மூலம் நீங்கள் முழுமையான பயனைப் பெறுவீர்கள் என்று நம்புகிறேன். இதனை விடவும் சிறப்பான நிபுணத்துவம் பெற்றவர்களாக நீங்கள் திகழ வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் தொழிற்பயிற்சி திட்டத்தின் சிரேஷ்ட ஆலோசகர் ஜோர்கான் டெப்தா, திட்டத்தின் பிராந்திய இணைப்பாளர் எம.அமி, இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் அதிகாரிகள், மட்டக்களப்பு கட்டட ஒப்பந்தகாரர்கள், தொழிற்பயிற்சி விரிவுரையாளர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

ஜேர்மன் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் நடைபெற்று வருகின்ற இச்செயற்றிட்டத்தின் கீழ் யுத்தம் மற்றும் சுனாமி என்பனவற்றினால் பாதிக்கப்பட்ட இளைஞர் யுவதிகள் தொழிற்பயிற்சியைப் பெற்று வருகின்றமை குறிபபிடத்தக்கது.

# துமிந்தவின் சூட்டுக் காயங்கள்




(கொழும்பு)

முல்லேரியா சூட்டுச் சம்பவத்தில் போது தலையில் சூடுபட்டு பாரிய காயங்களுக்குள்ளான நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.துமிந்த சில்வாவிற்கு சிறி ஜயவர்தன புர மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட பாரிய சத்திர சிகிச்சைகளைக் காட்டும் புகைப்படங்கள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினரது தலையில் பாரிய சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்ட போது எடுக்கப்பட்ட புகைப்படங்களும், தலையில் பட்ட துப்பாக்கிச் சூட்டின் காரணமாக ரவைகள் நுழைவது மற்றும் வெளிவருவதாக எக்ஸ்ரே படங்களும் இதில் அடங்கும்.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவிற்கு துப்பாக்கி வெடி விழுந்தது எவ்வாறு? மற்றும் அவருக்குத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது யார், என்பது தொடா பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் பிரசன்ன டி அல்விஸ் இரகசியப் பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

ஜனாதிபதி சட்டத்தரணி ஹேமார்ந்த வர்ணகுலசூரிய, துமிந்த சில்வாவிற்கு ஏற்பட்ட காயங்களைக் காட்டும் 19 ஸ்கேன படங்களையும் நீதிமன்றில் சமர்ப்பித்தார்.

இவ்வற்றில் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவினது மண்டை ஓட்டில் துப்பாக்கி ரவை உள்நுழைந்திருப்பது மற்றும் வெளியேறியிருப்பது தொடர்பில் படங்களில் காட்டப்பட்டுள்ளன.

இந்த துப்பாக்கிப் பிரயோகமானது 10 இலிருந்து 30 சென்ரி மீற்றர் தூரத்தில் இருந்தே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நீதிமன்றுக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# மூன்று மாத காலத்தில் நாட்டில் 342 கடத்தல்கள்

(கொழும்பு)

நாட்டில் சட்டமும் ஒழுங்கும் சீரழிந்துவிட்டன. கடந்த 3 மாதத்தில் 342 கடத்தல்களும் துஷ்பிரயோகங்களும் இடம்பெற்றுள்ளன. என்று ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரங்கே பண்டார் குற்றஞ் சாட்டியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 3 மாதத்தில் 342 கடத்தல்களும் துஷ்பிரயோகங்களும் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் ஆக 27 விடயங்கள் மட்டுமே தீர்க்கப்பட்டுள்ளன.

அமைச்சின் அதிகாரி ஒருவர், அமைச்சர் ஒருவரது வாகனத்தில் வந்தவர்களால் கடத்தப்பட்டுள்ளார்.

இந்தக் கடத்தலுக்கு இராணுவ ஜீப் ஒன்று பாதுகாப்பு வழங்கியுள்ளது. சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டிய பொலிஸார் கடத்தல்காரர்களுக்கும், போதை வஸ்து கடத்தல்காரர்களுக்கும் பாதுகாவலர்களாகவே இயங்குகின்றனர்.

இன்றைய அரசியற் கலாசாரத்தில் மக்கள் பலமற்றவர்களாக மாற்றப்பட்டுள்ளனர். மக்கள் எல்லா விடயங்களுக்கும் அரசியல்வாதிகளின் பின்னால் செல்ல வேண்டிய நிலை. ஒரு பிள்ளையை பாடசாலையில் சேர்க்கக்கூட அரசியல்வாதியின் அனுசரணை தேவைப்படுகிறது.

மணல் ஏற்றிச் செல்லவும், பேருந்துப் பாதை பெறவும் பத்து இலட்சம் ரூபா வழங்க வேண்டும். இலஞ்ச ஊழல் நாட்டில் தலைவிரித்தாடுகிறது.

வடபகுதியில் இன்னமும் சிவில் நிர்வாகம் இல்லை. இராணுவக் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன என்றார்.



**இலங்கைக்கு இவ்வருடம் வருகை தந்த 800,000 ஆவது சுற்றுலாப் பயணியை இலங்கை சுற்றுலா சபை பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் நேற்று வரவேற்றது.**

**இலங்கை வரலாற்றில் ஒரு வருடத்தில் வருகைதந்த அதிகூடிய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை இதுவாகும்.**

**ஜோன்சம்பியும் அவரின் மனைவியும் இவ்வருடத்தின் 800,000 ஆவது சுற்றுலாப் பயணியாக இலங்கைக்கு வந்தனர். அவர்களை சுற்றுலா சபைத் தலைவர் நாலக கொடஹேவா வரவேற்றார்.**

# தென்கிழக்கு பல்கலைக்கு குவைத் அரசு நிதியுதவி

(கொழும்பு)

தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் அபிவிருத்திக்காக குவைத அரசாங்கம் 10.2 மில்லியன் அமெரிக்க டொலர்களை இரணடாம் கட்டமாக வழங்கியுள்ளதாக இலங்கை வந்துள்ள குவைத் நிதிய தூதுக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த நிதியுதவி குவைத் அரசாங்கத்தின் அரபு பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியத்தின் ஊடாக வழங்கப்படவுள்ளது என அந்நிதியத்தின் பிரதிப் பணிப்பாளர் ஹிசாம் அல் வாஹ்யான் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிதியுதவியின் ஊடாக தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தரமான கற்கை நெறிகளை உருவாக்க முடியும். அத்துடன் பல்கலைக்கழகத்தின் மாணவர்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்க முடியும்.

எதிர்காலத்தில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் தரமான கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படும் என குவைத் நிதியம் எதிர்பார்க்கிறது.

இலங்கையின் கல்வி மற்றும் சுகாதார நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான அனைத்து உதவிகளையும் குவைத் நிதியம் ஊடாக வழங்கவுள்ளோம்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் முதற்கட்ட அபிவிருத்துக்காக 800 மில்லியன் ரூபாவை குவைத் நிதியம் முன்னர் வழங்கியுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தென்கிழக்கு பல்கலைக் கழக நிதியுதவி தொடர்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் செயலாளர் பி.வி.ஜயசுந்தர மற்றும் குவைத் நிதிய பிரதிப் பணிப்பாளர் ஹிசாம் அல் வாஹ்யான் ஆகியோர் இலங்கைக்கான குவைத் தூதுவர் யாகூப் யூசுப் அலாதீக் முன்னிலையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

# இஸட் புள்ளி தொடர்பாக சட்ட மா அதிபரிடம் ஆலோசனை

(கொழும்பு)

இவ்வருட க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பரீட்சையின் இஸட் புள்ளி தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனையை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு நாடியுள்ளது.

இவ்வருடம் பழைய பாடத்திட்டம், மற்றும் புதிய பாடத்திட்டங்களுக்கான பரீட்சைகள் நடைபெற்றன. இவற்றுக்கு பொதுவான இஸட் புள்ளி முறைமையை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு தயாரித்துள்ளதாக அந்த ஆணைக் குழு அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இந்த பொதுவான இஸட் புள்ளி முறைமைக்கு எதிராக மாணவர்கள் வழக்குத் தொடரக்கூடும் என்பதால் சட்டமா அதிபரின் ஆலோசனையை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நாடியுளளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். இஸட் புள்ளி விவகாரம் காரணமாக இவ்வருடம் க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கப்பம் பெற்ற பிரதியமைச்சர்



(கொழும்பு)

கம்பகா மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதி அமைச்சர் ஒருவர் கப்பம் பெற்றதாக நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல்மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க இது தொடர்பான முறைப்பாட்டை ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் அளித்துள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

குறித்த முறைப்பாட்டுக் கடிதத்தின் பிரதியையும் அவர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். குற்றம் சாட்டப்பட்டுள்ள பிரதியமைச்சர் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றை அமைப்பதற்காக 3.5 மில்லியன் ரூபாய்களை கப்பமாகப் பெற்றுள்ளதாக ரவி கருணாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

# சிறிகொத்தா தாக்குதல் சந்தேக நபர்கள் 16 பேர் நேற்றுப் பிணையில் விடுதலை

சிறிகொத்தா மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 16 பேர் நேற்றுப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

பிணையில் விடுதலை செய்யப்பட்டவர்களில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த மாகாணசபை உறுப்பினரான மைத்திரி குணரட்ன, ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த சிரால் லக்திலக ஆகியோரும் அடங்குவர்.


# பரீட்சை மோசடியால் 15 மாணவர்களுக்குத் தடை

(கொழும்பு)

இவ்வருட க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைகளின்போது பரீட்சை மோசடிகளில் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டில் 15 மாணவர்களுக்குத் தடை விதிக்கப்பட்டதாக பரீட்சைகள் ஆணையாளர் அனுர எதிரிசிங்க தெரிவித்தார்.


அதேவேளை, பரீட்சை கண்காணிப்பாளர்கள் நால்வர் மற்றும் பரீட்சை மண்டபப் பொறுப்பதிகாரிகள் நால்வர் ஆகியோருக்கும் பரீட்சைக் கடமைகளில் ஈடுபடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். இவ்வருட க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைகள் நேற்றுமுன்தினம் முடிவுற்றமை குறிப்பிடத்தக்கது.

35.





1) 9
2) 1
3) 20

36.




1) 3
2) 15
3) 54

37.




1) 72
2) 52
3) 90

**கீழுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றுக்கும் பொருத்தமான பழமொழியைத் தெரிவு செய்க.**

38. கவர்ச்சியானவை எல்லாம் நல்லவை என்று ஏமாறக் கூடாது.
   1) இக்கரை மாட்டிற்கு அக்கரை பச்சை
   2) மின்னுவதெல்லாம் பொன்னல்ல
   3) கழுதை அறியுமா கற்பூர வாசனை

39. கிடைப்பதற்கு அரிதான ஒன்றை மறப்பது நல்லது.
   1) பேராசை பெருந்தரித்திரம்
   2) கிட்டாதாயின் வெட்டென மற
   3) சூடுகண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது

40. "எனது கிராமம்" என்னும் தலைப்பில் கருத்துள்ள ஆறு வாக்கியங்கள் எழுதுக.

### கடந்த புதன்கிழமை வெளியான வெளியீடு - 5 கேள்விகளின் விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 01. 2 | 16. கலகம் | 31. வாந்திபேதி | 2. திருடன் | 55. 45, 57, 182, 304 |
| 02. 2 | 17. அப்பிள் | 32. நுளம்பு | 45. 1. தீமை 2. காடு | 56. 145, 157, 284, 399 |
| 03. 3 | 18. பலாப்பழம் | 33. குளோரின் | 46. 1. மரப்படம் | 57. 07, 27, 967, 1001 |
| 04. 1 | 19. கவி | 34. குரங்கு | 2. மீன்படம் | 58. 1 |
| 05. 2 | 20. மாலா | 35. வயிறு | 3. புத்தகப்படம் | 59. 1 |
| 06. நாத்திகன் | 21. 200 | 36. பொத்த | 47. அகவும் | 60. 3 |
| 07. குருடன் | 22. 1000 | 37. பள்ளா | 48. மனைவி | 61. 3 |
| 08. தச்சன் | 23. 20 | 38. ஊஞ்சல் விளையாட்டு | 49. உறைப்பு | 62. 3 |
| 09. இடையன் | 24. பூஞ்சோலை | 39. அக்கா | 50. வியாழன் | 63. பிரயாணச்சீட்டு |
| 10. அநாதை | 25. தொழிற்சாலை | 40. மாமரத்தில் | 51. சாந்தன் விவேகம் | 64. முத்திரை |
| 11. நூலகம் | 26. ஆராய்ச்சி | 41. தங்கை | உள்ளவன் | 65. காசோலை |
| 12. வழி | 27. அருங்காட்சியகம் | 42. மாங்காய் | 52. மரங்கள் பயன் தரும் | 66. மணி அடித்தல் |
| 13. வாளை | 28. வயல் | 43. 1. நீங்கள் | 53. விவேகம் வெற்றியை | 67. வெள்ளி |
| 14. குளவி | 29. காபோவைதரேற்று | 2. பிள்ளைகள் | தரும் | 68. 3 |
| 15. உளவு | 30. நுண்ணங்கி | 44. 1. ஆகாரம்/சாப்பாடு | 54. 57, 182, 304, 1000 | 69. 3 |



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

பகுதி - II

2 மணி

# கல்வி முரசு


வெளியீடு 06



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.


**கீழே சில கோலங்கள் விபரிக்கப்படுகின்றன. அவற்றை விளங்கி வெற்றிடத்தில் வரவேண்டிய எண்ணின் கீழ்க் கோடிடுக.**

01.





1) 49 2) 36 3) 64 4) 81

02.




1) 234567 2) 345678 3) 123456 4) 466789

03.




1) 36 2) 30 3) 42 4) 50

**04-09 வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றும் சரியாயின் (√) எனவும் பிழையாயின் (X) எனவும் அடைப்பினுள் இடுக.**

04. வயல்களில் வெள்ளைத் துணித் துண்டுகளைத் தொங்கவிடுவதன் மூலம் குருவிகளின்/பறவைகளின் வரவைக் குறைக்கலாம். ( )

05. வெண்டி மரத்தின் விதைகளை நாட்டுவதன் மூலம் புதிய வெண்டித் தாவரங்களை உருவாக்கலாம். ( )


06. மரவள்ளித் தாவரத்தில் வேரில் உணவு சேமிக்கப்படுகின்றது. ( )

07. குளவி, எறும்பு, தேனீ என்பன தனிவாழ்க்கைக்குரிய அங்கிகளாகும். ( )

08. மயிர்க்கொட்டி என்பது வண்ணத்துப்பூச்சியின் வாழ்க்கைப் பருவங்களுள் ஒன்றாகும். ( )


09. வாகன ஒளிச் சமிக்ஞை விளக்குகளில் சிவப்பு, செம்மஞ்சள், பச்சை நிறமுடைய மின்விளக்குகள் காணப்படும். ( )

**'த' வரிசைச் சொற்களைக் கொண்டு சொற்கோபுரத்தைப் பூரணப்படுத்துக.**




10. நெருப்பை இவ்வாறும் அழைப்பர்.
11. மனித உடம்பின் பிரதான பாகம்.
12. பாலினால் செய்யப்படுவது
13. பெறுமதி வாய்ந்த உலோகங்களில் ஒன்று
14. யானையின் மூக்கை இவ்வாறு அழைப்பர்.

**குமார் என்ற மாணவன் தன்னைச் சுற்றி விளையாட்டுப் பொருட்களை எவ்வாறு காட்சிக்கு வைத்தான் என்பது கீழே காட்டப்பட்டுள்ளது. அதை அவதானித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடைதருக.**




15. குமார் வடக்குத் திசையில் வைத்த பொருள் எது?

...........................................................................................

16. குமார் சைக்கிளை எத்திசையில் வைத்தான்?

...........................................................................................

17. குமாரின் மேற்குத் திசையில் காணப்படும் பொருள் எது?

...........................................................................................


18. குமார் வைத்த விளையாட்டுப் பொருட்களில் நீர் வழிப்போக்குவரத்துச் சாதானம் எது?

...........................................................................................

19. குமார் பேருந்தை எத்திசையில் வைத்திருக்கின்றான்?

...........................................................................................

**ஓர் பழவியாபாரி தான் 5 நாட்கள் விற்ற அன்னாசிப் பழத்தின் விபரத்தை வரைபாக்கியுள்ளார். அதை அவதானித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடைதருக.**




20. சமமான அளவு பழங்களை எந்த நாட்களில் விற்றார்?

...........................................................

21. குறைந்தளவு பழம் விற்ற நாள் எது?

...........................................................

22. செவ்வாயும், வியாழனும் எத்தனை பழங்கள் விற்கப்பட்டது?

...........................................................

23. ஒரு அன்னாசி 80 ரூபாவாயின் வியாழன் விற்பனையால் கிடைத்த பணம் எவ்வளவு?


...........................................................

24. 5 நாட்களும் எத்தனை பழங்கள் விற்கப்பட்டன?

...........................................................



**பின்வரும் A, B, C, D அடைப்புக்களைப் பயன்படுத்தி 25- 28 வரையான வினாக்களுக்கு விடைதருக.**





25. இந்த அடைப்புகளிடையே இரண்டு பாடசாலை உபகரணம் வீதம் உள்ள இரு அடைப்புக்களும் எவை?
    1) B, C    2) B, D    3) C, D
26. இந்த அடைப்புகளிடையே இரண்டு பழங்கள் வீதம் உள்ள மூன்று அடைப்புக்களும் எவை?
    1) D, B, C    2) A, B, D    3) A, B, C
27. இந்த அடைப்புக்களிடையே போக்குவரத்துச் சாதனங்கள் காணப்படும் அடைப்புக்கள் எவை?
    1) A, D    2) C, D    3) B, D
28. இந்த அடைப்புக்களிடையே மரக்கறியுள்ள அடைப்புக்கள் எவை?
    1) B, D, A    2) B, C, D    3) A, B, C

**பின்வரும் தொடர்மொழிகளுக்குப் பொருத்தமானதாக ஒவ்வொன்றின் கீழேயுள்ள நான்கு சொற்களில் ஒரு சொல் அமையும். அச்சொல்லின் கீழ்க் கோடிடுக.**

29. புண்ணிய தலங்களுக்குச் செல்லும் பயணம்?
    1) பிரயாணம்    2) யாத்திரை    3) சுற்றுலா    4) நடைபவனி
30. போட்டி நிகழ்ச்சிகளில் சரி பிழை கூறுபவர்?
    1) அதிபர்    2) நடுவர்    3) மத்தியாளர்    4) சட்டம்பியார்
31. துணியினால் தலையிலே அழகாகக் காட்டப்படுவது?
    1) தொப்பி    2) தலைப்பாகை    3) தலப்பா    4) முட்டாக்கு
32. குற்றவாளிகள் தண்டனை அனுபவிக்கும் இடம்?
    1) மனை    2) குடிசை    3) குகை    4) சிறை
33. பல துறைகளிலும் உயர்கல்வி பெறும் இடம்?
    1) ஆச்சிரமம்    2) பல்கலைக்கழகம்    3) கல்லூரி    4) மடைப்பள்ளி

**கீழ்வரும் எண் கோலத்தை அவதானித்து இடைவெளிக்குரிய சரியான எண்ணைத் தெரிவு செய்க.**

34.




1) 24
2) 36
3) 48



# வடக்கு சிவில் சமூகத்தின் பெயரால்...

சிவில் சமூகம் என்கிற பெயரில் வடக்கு மாகாணசபைத் தேர்தலை பகிஷ்கரிக்க கோரி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருக்கு வடக்கின் சில கல்விமான்கள் வர்த்தகர்கள் இணைந்து அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கின்றார்கள்.

வடக்கு மாகாணசபைத் தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டும், தேசியம் சுய நிர்ணயம் என்கிற அடிப்படையில் உறுதியாக நிற்க வேண்டும் என அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

தம்மை சிவில் சமூகமாக அடையாளப்படுத்த விரும்பும் இந்த சிலர் நடந்து முடிந்த போரின் நெருக்கடிகளைப் பயன்படுத்தி தம் மடிகளை பெருக்கிக்கொண்டது மட்டுமன்றி, தென்னிலங்கை அரசியல் வாதிகளுடன் உறவை ஏற்படுத்திக் கொண்டு எந்த இழப்பும் இல்லாது சாணக்கியமாக வாழ்க்கையை நகர்த்தியவர்கள் என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

அதுமட்டுமன்றி போரில் தமிழ் மக்களுக்கு ஏற்றபட்ட இழப்புக்கள் துன்பங்கள் பற்றி இச் சிவில் சமூகம் எதுவும் அலட்டிக்கொள்ளாமல் இருந்தது மட்டுமன்றி இந்த அவலங்களுக்காக அரசுக்கும் தமிழ் தரப்புக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடுகளில் தமது பெயர் வந்துவிடக் கூடாதென்பதில் மிக எச்சரிக்கையாக இருந்து வந்ததையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

கடந்த காலங்களில் இந்த சிவில் சமூகம் தான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை மட்டுமன்றி புலிகளையும் வழி நடத்தி வந்திருக்கிறது என்பதோடு அதன் விருப்பங்களுக்கேற்றாற் போல் இன்றைய தமிழ் தேசியக் கூட்டமைப்பு உஷாராக இல்லை என்பதால் அதன் இருப்பு வடிவத்தில் மாற்றங்களை ஏற்படுத்த இந்த சிவில் சமூகம் விருப்பம் கொண்டிருக்கிறது.

நிற்க, அரசிடமிருந்து கிடைக்க முடியாதவற்றை அரசியலுரிமைக் கோஷங்களாக்கி அவற்றை பெற்றுத் தருவதாக மக்களை நம்ப வைத்து வாக்கு வேட்டை நடாத்தி அதன் மூலம் நாடாளுமன்றக் கதிரைகளை கைப்பற்றிக் கொள்ளும் அரசியல் கலாசாரமொன்றை நாம் கொண்டிருக்கிறோம் என்பதை முதலில் எமது தமிழ் மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஏதாவது கிடைக்கக் கூடியதை மக்களுக்கு கூறி பின்னர் அதை பெற்றுக் கொடுத்துவிட்டால் அரசியல் பயணம் அத்துடன் நின்று விடும். எனவே கிடைக்க முடியாதவற்றின் மீது மக்களை நம்பவைப்பது இந்த வகை அரசியலின் மூலோபாயமாகும். அதன் பின்னர் அந்த விடயத்தை எல்லா மக்களும் அறிந்து கொள்ளும் வகையில் பத்திரிகையாளர்களை கைக்குள் போட்டுக்கொள்வது இதன் இரண்டாவது படி.

வாக்குகளை பரந்த தளத்தில் பெரும் எண்ணிக்கையாக பெற வேண்டிய ஒரு சூழலில் தமிழ் மக்களை இன ரீதியாக அக்கறை கொள்ள வைக்க வேண்டிய தேவை நிர்ப்பந்தம் இந்த அரசியலில் இருக்கிறது.

இதில் அரசிடம் கேட்பது மக்களுக்கு கிடைக்குமா என்பதை விட அதனை மக்கள் நம்புகிறார்களா என்பதை கூடிய கவனமெடுத்து அவதானிப்பது முக்கியம். மக்களின் நம்பகத் தன்மையைப் பொறுத்து மேலும் கிடைக்க முடியாத விடயங்களின் பட்டியல் இன்னும் வரிசைப்படுத்தப் படும். இவ்வாறுதான் இந்த அரசியல் நகர்ந்து கொண்டு செல்கிறது.

கடந்த ஜனாபதித் தேர்தலில் இராணுவத்தை வழிநடத்திய சரத் பொன்சேகாவை ஜனாதிபதியாக்குவதன் மூலம் போரை முன்னெடுத்த ஜனாதிபதியை வீழ்த்தி அரசுக்குப் பாடம் புகட்டலாம் என தமிழ் மக்கள் நம்ப வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இதில் வடக்கு கிழக்கு இணைப்புக்கு எதிராக நீதிமன்றம் சென்ற ஜேவிபி உடனும் தமிழ் மக்களுக்கெதிரான மூன்று இனக்கலவரங்களுக்கு காரணமான ஐக்கிய தேசியக் கட்சியுடனும் இணைந்து சரத் பொன்சேகாவை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆதரித்திருந்ததையும் இச் சிவில் சமூகம் கண்டுகொண்டும் மௌனம் காத்ததை தமிழ் மக்கள் நன்கறிவர்.

அதன் பின்னர் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் இடம்பெற்ற போரின் அவலங்களையும் மீள்குடியேற்றப்படாத மக்களின் பிரச்சினைகளையும் கூறி தமிழ் மக்களின் கூட்டான எண்ணத்தை வெளிப்படுத்த வலியுறுத்தி மக்கள் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள்.

உள்ளூராட்சித் தேர்தலில் சர்வ தேசத்தைக் கொண்டு இலங்கை அரசுக்கு பாடம் புகட்டப்போவதாக தமிழ் மக்களை நம்ப வைத்து வாக்குகளை வென்றிருக்கிறார்கள்.

ஆனால், ஒரு வெற்றிடத்தில் இவற்றையெல்லாம் நிகழ்த்திவிட முடியாது. தேர்தல் பிரசாரத்திற்கு சாதகமாக அக, புற பிரச்சார சூழல்கள் எப்படி அமைகின்றன என்பதைப் பொறுத்து மக்களை நம்பவைப்பதற்கான அவர்களது யுக்திகள் மாறுபடும்.

இதில் தேர்தல் முடிந்த பின்னர் மக்களுக்கு வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் கூறியவை என்ன விளைவுகளை ஏற்படுத்தும் அரசு இதைப்பற்றி எவ்வாறு சிந்திக்கும் என்பதெல்லாம் பற்றி அவர்களுக்கு கவலையில்லை. அதற்கு சிறிது மானம் ரோசம் தேவை.

இப்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சாயம் வெளுத்து விட்டதாக தம்மை சிவில் சமூகமாக கூறிக் கொள்ளும் சிலருக்கு சந்தேகம் எழுந்திருக்கிறது. உண்மையில் தமிழ் மக்களை எவ்வாறு ஏமாற்றலாம் என்பதை தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு சொல்லிக்கொடுத்தவர்கள் இவர்கள்தான். இப்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் அம்பலப் பட்டு போயிருப்பது இவர்களுக்கு சற்று சிரமமாக இருக்கிறது.

இப்போது கோஷங்களை மட்டுமன்றி நபர்களையும் மாற்றி அமைக்க வேணடிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. காரணம் இந்த அரசியல் அரங்கத்தில் நடிக்க அனுமதிக்கப்பட்டவர்கள் பகிரங்கமாக தமக்கிடையே அடிபட்டுக்கொள்ள ஆரம்பித்து விட்டார்கள். இந்த அடிதடியில் இவர்களது நாடகத்தின் உண்மையான சொரூபம் மக்களுக்கு தெரிய ஆரம்பித்து விட்டதால் மேடையில் ஏற்றியவர்களை இப்போது இறக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. இது தான் சிவில் சமூகத்தின் அறிக்கை வெளிப்பாடாகும்.

*- எஸ்.கணபதிப்பிள்ளை*

# செல்போன் மூலம் நிதிப் பரிமாற்றம்

இணையத்தின் மூலம் வங்கிச் சேவைகள் நம் நாட்டில் இப்போது பரவலாகிவிட்டது. இன்று நாம் இணையத்தின் மூலமே சுலபமாக பணப்பரிவர்ததனை செய்துகொள்ள முடியும்.

பேபால் (www.paypal.com) என்ற அமைப்பு, ePay தொடங்கிய காலத்திலிருந்து அந்த இணையத தளம் மூலம் நடக்கும் வியாபாரத்திற்கு நிதி பரிவர்த்தனைகளுக்கு உதவி வந்தது. இன்று பேபால் ஈ.பே.-யின் ஒரு அங்கம். பேபால் என்பது வங்கி, கார்ட்கள் போன்ற ஒரு அமைப்பு. வங்கிகள், கார்ட்களுடன் சரளமாக உரையாடும் ஒரு இணைய சேவை. முதலில் அங்கு உங்களுக்கு ஒரு கணக்கு வேண்டும். கணக்குடன் உங்கள் கிரெடிட் கார்ட் மற்றும் உங்கள் வங்கி கணக்கை இணைத்துவிடலாம். பணம் வெளியே போகும்போது கிரெடிட் கார்ட் வழியாக செல்லும். உள்ளே வரும்போது வங்கிக் கணக்கில் சேர்ந்துவிடும். ஒவ்வொரு பரிமாற்றத்திற்கும் பேபால் நிறுவனத்திற்கு இவ்வளவு என்று ஏற்பாடு. உலகில் விற்பவர், வாங்குபவர் எங்கிருந்தாலும் பேபால் மற்ற விஷயங்களைப் பார்த்துக்கொள்ளும்.

சற்று யோசித்துப் பாருங்கள். எங்கோ வசிக்கும் ஒருவர் இணையத்தில் ஒரு விளம்பரத்தைப் பார்த்து, விற்பவரிடம் மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொண்டு, பொருள் பிடித்துப் போய் வாங்க ஆசைப்படுகிறார். சில கிளிக்குகள் மூலம் பேபால் இந்த நிதி/பொருள் பரிவர்த்தனையை முடித்துத் தருகின்றது. 20 வருடங்களுக்கு முன் இதற்கு எத்தனை காகிதங்கள், எத்தனை வங்கி விஜயம், எத்தனை நேர விரயம்! வாங்குவோரிடம் பணமிருந்தால், விற்பவருக்கு இஷ்டமிருந்தால் பரிவர்த்தனை எவ்வளவு எளிதாக முடியுமோ அவ்வளவு எளிதாக்கும் முயற்சி இந்த சேவைகள்.

அடுத்தபடியாக, இளைய சமூகத்தினருக்கு மிகவும் பிடித்த இன்னோரு விஷயம், ஐ.்.போன்.

இதை ஜப்பானிய நிறுவனம் ஒன்று இன்னும் ஒரு படி மேலே எடுத்தச் செல்ல முயற்சி செய்து வருகிறது. http://shopsavvy.mobi/ என்ற இணைத்தளம், கடைக்குச் சென்று பட்டைக் குறியீடு ஒன்றை ஐ.்.போனில் வருடினால், அதன் குறைந்த விலை இணையத்தில் எங்கே என்று தேடிச்சொல்லிவிடுகிறது. பிடித்திருந்தால், ஐ.்.போனின் மூலமாகவே பொருளை வாங்கி விடலாம். இந்த நிறுவனமும் பேபால் சேவையை அடிப்படையாக கொண்டது.

செல்போன் நிதிப்பரிவர்த்தனை முறைகள் வளர்ந்த நாடுகளிலிருந்து வரவில்லை. அதிகம் வளர்ச்சியே அடையாத ஆபிரிக்க நாடுகளிலிருந்து தொடங்கிய புரட்சி இது. வேறு எந்த வசதியும் இல்லாத்தால், செல்போன் அமைப்பைப் பயன்படுத்தி நிதி விஷயங்களை கவனிக்கிறார்கள் ஆபிரிக்க மக்கள்.

15 மில்லியன் நுகர்வோர் கொண்ட இந்த சேவை, ஆபிரிக்காவில் மிகவும் பிரபலமாகி உள்ளது. உலகில், அதிக செல்போன் பாவனை உள்ள நாடுகள் சீனாவும் இந்தியாவும் இதைப் போன்ற சேவைகளுக்கு இந்த நாடுகளில் வாய்ப்புகள் அதிகம். கிரெடிட்/டெபிட் கார்ட்கள் ஓரளவிற்கு நிதி ஸ்திரத்தன்மையுடையவர்களுக்கே சரிப்பட்டு வரும். வங்கிக் கணக்கில்லாதவர்கள், இடைத்தரகர்களிடம் சிக்கி, சரியான நிதிப் பரிமாற்ற சேவை இல்லாது தவிப்போர் இந்நாடுகளில் ஏராளம். இந்த ஒபோபே செல்போன் நிதிப்பரிவர்த்தனை பெரும் உதவியாக இருக்கும்.

உதாரணத்திற்கு 5 நண்பர்கள் உணவு உண்ண ஓட்டலுக்கு செல்லுகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம் 1,000 ரூபா பில் வருகிறது என்று வைத்துக் கொள்வோம் ஐவரும் ஒபோபேயில் பதிவு செய்யப்பட்டுள்ளார்கள் என்றும் வைத்துக் கொள்வோம். ஒருவர் தன்னுடைய டெபிட் கார்ட் மூலம் 1,000 ரூபாயை ஹோட்டலுக்கு கட்டி விடுகிறார். மற்ற நான்கு பேரும் தலா 200 ரூபா டெபிட் கார்ட் நபருக்கு கொடுக்க வேண்டும். செல்பேசி மூலம் தங்களுடைய ரகசிய எண்ணை (PIN) உபயோகித்து ஒபோபே மூலம உடனே அவருக்கு பணம் மாற்றம் செய்யலாம் பிறகு தருகிறேன் என்ற சாக்குக்கு இடமே இல்லை. செல்போன் தொலைந்து போனாலும் ரகசிய எண் உங்களுக்குத்தானே தெரியும். திருடனால் பணமெடுக்க முடியாது.

*- ரவி நடராஜன்*



சிம்புவை விரல் நடிகர்னு ஊரே நக்கலடிக்கும். அதனால "இந்த படத்துலயாச்சும் பத்து வெரலையும் கட்டிவச்சிட்டு நடிங்க பாஸ்"னு டைரக்டர் கொஞ்சி கேட்டிருப்பார் போல. பயபுள்ள வெரலை கட்டிப்போட்டுட்டு கண்ணு காது மூக்கு முழி இடுப்பு உடுப்புனு டோட்டல் பாடி பார்ட்ஸ்லயும் வளைச்சி வளைச்சி வித்தை காட்டி படம் பாக்கற நம்மள ரொம்ப டார்ச்சர் பண்ணிடுச்சி. அது வாசகம் பரவால்லங்க படம் முழுக்க திருநெல்வேலி பாஷை பேசுறேனு அடித்தொண்டைல பேசி ஏலே வாலே ஓலேனு இழுத்து இழுத்து பஞ்ச் டயலாக் பேசி ஸ்ஸ்ஸ்ப்பா.. ஒரு மனுஷன் எவ்ளோ நேரந்தான் வலிக்காத மாதிரியே இருக்கறது.

## துவைச்ச துணிய துவைப்போமானு ஒரு படம் - ஒஸ்தி

இந்த சிம்புபையன் சாதாரண தமிழ்ல பஞ்ச் டயலாக் பேசினாலே இந்தியாவுக்கே பொறுக்காது.. இதுல திருநெல்வேலி பாஷைல பன்ச் அடிச்சா 2011லேயே உலகம் அழிஞ்சிராதா! பயபுள்ள பொலீஸ் வேஷத்துல வேற நடிச்சி தொலைச்சிருக்கு. போஸ்டர்ல ஏதோ கிராபிக்ஸ் பண்ணி பாக்க மீசையில்லாத தங்கப்பதக்கம் சிவாஜியாட்டம் லிட்டில் சூப்பர் ஸ்டாரை காட்டிட்டாலும் ஸ்க்ரீன்ல பாக்க சொல்ல கோயம்புத்தூரு ஸ்டேன்ஸ் ஸ்கூலு பத்தாம்ப்பூ பையனாட்டம்.. தியேட்டரே சிரிச்சி மகிழுதுய்யா!

அந்த பொண்ணு ஹீரோயினு படம் முழுக்க அங்கிட்டிருந்து இங்கிட்டு நடக்குது.. இங்கிட்டுருந்து அங்கிட்டு நடக்குது.. ஒன்னு ரெண்டு வசனம் பேசுது.. பாட்டுல கூட சிம்புதான் ஆடுதாரு. ஹீரோயின் நடந்துகிட்டே இருக்குது. அஜித்து அண்ணன் கிட்ட நடிப்பு டிரெயினிங் எடுத்துகிட்ட புள்ளையோ என்னவோ.. இடுப்புல தங்கத் துல அர்ணாகொடியோ என்னவோ மாட்டிகிட்டு ஜிங்கு ஜிங்குனு செம நடப்பு குட் இடுப்பு! அதிர்ச்சியூட்டும் வகைல ஜித்தன் ரமேஷ் ஓரளவு சுமாரா நடிச்சிருக்காப்ல..

வில்லன் நடிகர் சோனுசூட் எப்பயும் போல ஏஏஏஏஏய் னு கத்தறதையும் டாடா சுமோவுல பாஞ்சு பாஞ்சு துரத்தறதையும் நல்லா திருப்தியா செஞ்சுருகாப்ல. படத்தோட ஒரே சந்தோசம் பேரரசு இஸ்டைல் மசாலா வசனங்கள்! அப்புறம் அந்த கலாசலா கலாசலானு எல்.ஆர்.ஈஸ்வரியோட பாடி மல்லிகா ஷெராவத்து ஆடற குத்துப்பாட்டு.. அந்த ஒரே ஒரு பாட்டுக்காக படம் பாக்கலாம்.

இத்தன கொடுமைக்கு மத்தில கிளைமாக்ஸ்ல சிம்பு சிக்ஸ்பேக்ஸ் பாடியெல்லாம் காட்டுறாரு. கண்ணு ரெண்டையும் தோண்டி காக்காய்க்கு போட்டுரலாம்போல கொலைவெறி வருது..

மத்தபடி பெருசா சொல்ல ஒன்னுமில்லே.. அரைச்ச மாவ அரைப்போமா துவைச்ச துணிய துவைப்போமானு ஒரு படம்.

*- அதிஷா*

# மத்திய அரசின் லோக்பால் மசோதா ஏமாற்றமும் அதிருப்தியும் அளிக்கிறது



(சென்னை)

மத்திய அரசு கொண்டு வந்துள்ள லோக்பால் மசோதாவின் 70 பக்கப்பிரதி ஒன்று சமூக சேவகர் அன்னாஹசாரே கைக்கு கிடைத்தது. மசோதாவை படித்துப் பார்த்த அவர் ஏமாற்றமும் அதிருப்தியும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்றுக் காலை மும்பையில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தபோது கூறியதாவது:-

வலுவான லோக்பால் மசோதாவைக் கொண்டு வரப்போவதாகக்கூறிய மத்திய அரசு, தன் வாக்குறுதியை நிறை வேற்றவில்லை. தற்போதைய லோக்பால் மசோதாவால் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை. எனவே திட்டமிட்டபடி எனது போராட்டம் நடைபெறும்.

மும்பை ஆசாத் மைதானத்தில் 3 நாட்கள் உண்ணாவிரதம் இருந்த பிறகு முதலாம் திகதி டில்லியில் சோனியாவின் வீட்டின் முன்பு மறியல் போராட்டத்தில் ஈடுபடுவேன்.

அரசு கொண்டு வந்துள்ள லோக்பால் மசோதாவை, வழி காட்டும் ஒரு மசோதா என்று சோனியா சொல்கிறார். உண்மையில் இந்த மசோதா எந்தெந்த வகைகளில் வலுவாக உள்ளது என்பதை அவர் விளக்க வேண்டும்.

தற்போதைய மசோதா வலுவானது தான் என்று சோனியா கூறுவாரானால் இது பற்றி அவர் பொது இடத்தில் என்னுடன் நேருக்கு நேர் ஊடகங்களுக்கு முன்பு விவாதம் நடத்தத் தயாரா? சி.பி.ஐ. அமைப்பை தன் கட்டுப்பாட்டுகளுள் கொண்டு வராதவரை இது பிரயோசனம் இல்லாத மசோதாவாகும்.

சோனியாவுக்குத் துணிவிருந்தால் வெளியில் வந்து என்னுடன் வாதம் செய்ய வேண்டும். அதை நாட்டு மக்கள் பார்க்கட்டும். அப்போது இந்த மசோதா வலுவானதுதான் என்று அவர் நாட்டு மக்களை சமரசம் செய்யட்டும். அதன் பிறகு நான் இந்த மசோதா எந்தெந்த வகைகளில் வலிமை இல்லாதது என்பதை நாட்டு மக்களுக்கு விளக்கமாக கூறுகிறேன் என்றார்.




## இந்தியச் செய்திகள்

# கொலை முயற்சி இடம்பெறுவதாக 2ஜி வழக்கின் சாட்சி வாக்குமூலம்

(புதுடில்லி)

தன்னைக் கொல்ல யாரோ ஒருவர் முயற்சி செய்வதாகவும், தன்னைப் பின்தொடருவதாகவும் முன்னாள் தொலைத் தொடர்புத் துறை அமைச்சர் ஆ.ராசாவின் முன்னாள் கூடுதல் தனிச் செயலர் ஆசிர்வாதம் ஆச்சாரி சி.பி.ஐ நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இவர் 2ஜி ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஒதுக்கீட்டு வழகில் முக்கிய சாட்சியாகச் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் தனக்கு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக ஆச்சாரி கூறியுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தன்னை மிரட்டிய நபர் நீதிமன்றத்தில் இருந்து சற்று முன்னர்தான் வெளியேறியதாக அவர் நீதிபதியிடம் தெரிவிததார்.

இதையடுத்து அவர் கூறிய நபரை டில்லி பொலிஸார் நீதிமன்ற வளாகத்துக்குள்ளேயே பிடித்து நீதிபதி சைனி முன்பு ஆஜர்படுத்தினர்.


அவர் பெயர் ஜெய்ப்ரகாஷ் என அடையாளம் காணப்பட்டது. எனினும் தனக்கு ஆச்சாரியை தெரியாது என்றும் தான் அப்பாவி என்றும் அவர் கூறியுள்ளார்.

எனினும் சில தினங்களுக்கு முன் தனது வீட்டிற்குள் நுழைய முயற்சித்தவர் ஜெய்ப்ரகாஷ்தான் என தனது பாதுகாவலர் அடையாளம் காட்டியுள்ளார் என ஆச்சாரி கூறியுள்ளார்.

ராசாவின் முன்னாள் தனிச் செயலர் ஆர்.கே.சண்டோலியாவுடன் ஜெய்ப்ரகாஷ் காலையில் நீதிமன்றத்தில் அமர்ந்திருந்தார் என்றும் நீதிபதியிடம் ஆச்சாரி கூறினார்.


# பிரிதிவி -2 ஏவுகணைச் சோதனை ஒத்திவைப்பு

(புவனேஸ்வர்)



ஒரிசா மாநிலம் கண்டிப்பூரில் பிரிதிவி-2 ஏவுகணையின் இரட்டைச் சோதனை நேற்று நடைபெறுவதாக இருந்தது. ஆனால் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக ஏவுகணைச் சோதனை நடத்தப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது. தொழில்நுட்ப கோளாறை சரி செய்த பிறகு ஏவுகணைச் சோதனை எப்போது நடைபெறும் என்பது பற்றி முடிவு செய்யப்படும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

# படகு கவிழ்ந்து 7 சிறுவர்கள் பலி



(டில்லி)

உத்தரப் பிரதேச மாநிலம் கோரக்பூர் பகுதியில் உள்ள ரபதி ஆற்றின் அக்கரைக்கு சென்ற சிறிய படகு விபத்துக்குள்ளானதில் 7 சிறுவர்கள் பலியாகி யுள்ளனர்.

அனுமதிக்கப்பட்ட எண்ணிக் கைக்கும் அதிகமாக 20 பேரைப் படகில் ஏறறிக் கொண்டு சென்றதால் அதிக சுமையின் காரணமாக ஆற்றில் படகு கவிழ்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்தில் 9 முதல் 16 வயதுக்கு உட்பட்ட 7 சிறுவர்கள் நீரில் மூழ்கி பலியானார்கள். மேலும் ஒரு சிறுவனின் உடல் தேடப்பட்டு வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த விபத்தில் உயிர் இழந்தவர்களின் குடும்பங்களுக்கு மாவட்ட நிர்வாகம் தலா பத்தாயிரம் ரூபா வழங்கியுள்ளது.

# அணு விஞ்ஞானி பி.கே.அய்யங்கார் காலமானர்


(புதுடில்லி)

இந்தியாவின் முன்னாள் அணு விஞ்ஞானியும், அணு சக்தித் துறையின் முன்னாள் தலைவருமான பி.கே. அய்யங்கார்(வயது 80) நேற்று முன்தினம் காலமானார்.

இந்திய விஞ்ஞானி பி.கே. அய்யங்கார், கடந்த 1952 இல் மும்பை டாடா அணு ஆராய்ச்சி மையத்தில் தனது வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்கினார். கடந்த 1990-93 ஆம் ஆண்டுகளில் அணுசக்தித் துறையின் தலைவராகவும், செயலராகவும் திறம்படப் பணியாற்றினார்.

அணுசக்தித் துறையில் பல்வேறு உயர் பொறுப்புக்களை வகித்த அய்யங்கார், கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் உள்ள திருவாங்கூர் பல்கலைக் கழகத்தில் தனது கல்லூரிப் படிப்பை முடித்தார். பின்பு மும்பை பல்கலைக்கழகத்தில் 1963 இல் முனைவர் பட்டம் பயின்றார்.

இயற்பியல் துறையில் சிறந்து விளங்கிய பி.கே. அய்யங்கார்



கடந்த 1998 ஆம் ஆண்டில் கேரள அரசின் அறிவியல் ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார்.

# ராகுலைத் திருமணம் செய்ய விரும்பும் பெண்கள்



புதுடில்லி)

காங்கிரஷ் கட்சியின் இளம் தலைவர் ராகுல்காந்தி. அடுத்த பிரதமர் இவர் தான் என்று காங்கிரஷ் மூத்த தலைவர்களால் முன்னிலைப் படுத்தப்பட்டு வருபவர். 40 வயதை நெருங்கும் ராகுல் காந்தி திருமணம் ஆகாதவர். தற்போது உத்தரபிரதேச சட்டசபை தேர்தலில் முழுக் கவனத்தையும் செலுத்தி வருகிறார்.

இம்மாநிலத்தில் மீண்டும் காங்கிரஷ் ஆட்சியைக் கொண்டு வரவேண்டும் என்று தீவிரமாக உழைத்து வருகிறார். இவ்வளவு பிசியாக இருந்தாலும் தனது பெயரிலான இணையத் தளமுகவரிக்கு வரும் இ.மெயில்களைப் படித்து, அவற்றுக்கு பதில் அளிக்க தவறுவது கிடையாது. சமீபகாலமாக இவருக்கு வரும் இ.மெயில்கள் திருமணத்தை வலியுறுத்தியே வருகின்றன.

நலம் விரும்பிகள் அவரை திருமணம் செய்து கொள்ளுமாறு அறிவுரை கூறியுள்ளனர். சிலர் தகுந்த மணமகள் இருப்பதாகத் தெரிவித்தும், இ.மெயில் அனுப்பி உள்ளனர். இளம் பெண்கள் சிலர் தங்களை திருமணம் செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொணடு இ.மெயில் அனுப்புகின்றனர். இதுமாதிரியான இ.மெயில்கள் அவருக்கு சங்கடத்தை ஏற்படுத்தினாலும் நாகரீகமான சாதுர்யமான பதில்களால் சமாளித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# நடைபாதையில் நாற்காலி போட்டு மக்களுக்காக பணியாற்றுவேன்


(சென்னை)

சட்டமன்ற உறுப்பினர் என்கின்ற வகையில் தொகுதி மக்களுக்குக் கடமையாற்றும் எனது அலுவலகம் பறிக்கப்படுமேயானால் கொளத்தூர் மையப்பகுதியில் எங்கேயாவது ஒரு நடைபாதையின் நடுவே மேசை-நாற்காலி போட்டுக் கொண்டு என்மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த மக்களுக்கு கடமையாற்றுவேன் என்று தி.மு.க பொருளாளர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில்,

தமிழகத்திலுள்ள 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் அந்தந்த தொகுதி எல்லைக்குள்ளாகவே பொதுமக்களின் குறைகளை கேட்டறிவதற்கும், அடிப்படை வசதிகள் தொடர்பான புகார்களை கேட்டு, அவற்றை களைவதற்கும் ஏதுவாக கருணாநிதி 1996 ஆம் ஆண்டு தமிழக முதல்வராக இருந்தபோது, சட்டமன்ற உறுப்பினர்களுக்கான அலுவலகங்களைகட்டித் தர உத்தரவிட்டு, அதனடிப்படையில் பெரும்பான்மையான தொகுதிகளில் அப்பணி நிறைவேற்றப்பட்டது.

அந்த வகையில், சென்னையில் ஏற்கனவே இருந்த 14 தொகுதிகளில் 12 தொகுதிகளுக்கான சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அலுவலகங்கள் சென்னை மாநகர்ராட்சி சார்பிலும் - பொதுப் பணித் துறையின் சார்பிலும் அமைத்து வழங்கப் பட்டுள்ளது.



தொகுதிகளின் மறுசீரமைப்பு அடிப்படையில் 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில், சென்னை 16 சட்டமன்றத் தொகுதிகளாக உயர்ந்தது. அதில் ஐந்து தொகுதிகளுக்கு சட்டமன்ற தொகுதி அலுவலகங்கள் கட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

2011 ஜூன் மாதத்தில் நடைபெற்ற சென்னை மாநகராட்சி மன்றக் கூட்டத்தில் மேற்சொன்ன ஐந்து சட்டமன்றத் தொகுதி அலுவலகங்கள் கட்டுவதற்கு ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதனடிப்படையில், கொளத்தூர் தொகுதியில் முதல் வட்டச் சாலை, ஜவஹர் நகர், கொளத்தூர் என்னுமிடத்தில் கடந்த 2001 ஆம் ஆண்டு கட்டப்பட்டு, எவ்விதப் பயன்பாடும் இல் லாமல் இருந்த, பழைய கட்டடம் ஒன்றினை சீர்ப் படுத்தி, மாநகராட்சி நிர்வாகத்தினர், தொகுதி அலுவலகமாக தற்போது எனக்கு வழங்கி யுள்ளார்கள் என்றும் அதில் தெரிவித்துள்ளார்.

உலகச் செய்திகள்

# பாகிஸ்தானுடனான உறவு மிக முக்கியமானது அமெரிக்கா



பாகிஸ்தான் நாட்டுடனான அமெரிக்காவின் உறவு சிக்கலானது, ஆனால் மிகவும் முக்கியமானது என அமெரிக்காவின் இராணுவ தலைமையகமான பென்டகனின் செய்தித் தொடர்பாளர் ஜார்ஜ் லிட்டில் தெரிவித்துள்ளார்.

வொஷிங்டனில் இந்தாண்டின் இறுதிக்கான பத்திரிகையாளர் கூட்டம் நடைபெற்றது. அதில் அவர் பேசியதாவது, இரு நாடுகளும் இணைந்து சர்வதேச அளவில் அச்சுறுத்தி வரும் பயங்கரவாதத்தை ஒழிக்கும் நடவடிக்கைகளில் இணைந்து செயற்பட்டு வருகிறோம், அதில் வெற்றியும் கண்டு வருகிறோம்.

பயங்கரவாதிகளால் அமெரிக்க மக்களும், பாகிஸ்தான் மக்களும் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். இனிவரும் காலங்களில், இரு நாடுகளும் இணைந்து செயற்பட்டுப் பயங்கரவாதத்தை முற்றிலும் ஒழிப்போம் என்று கூறியுள்ளார்.

# சிரியா கலவரத்தில் 5 ஆயிரம் பேர் பலி



சிரியாவில் அரசுக்கு எதிராக நடந்து வரும் கலவரத்தை முடிவுக்கு கொண்டு வரும் முயற்சியில் அரபுக் கூட்டமைப்பு ஈடுபட்டுள்ளது. சிரியா நாட்டில் அரசுக்கு எதிராக ஆயுதம் தாங்கிய குழுக்கள் போராட்டம் நடத்தி வருகின்றன. கடந்த மார்ச் மாதம் தொடங்கிய கிளர்ச்சி நாளுக்கு நாள் தீவிரம் அடைந்து கொண்டே செல்கிறது.

சிரியா அரசை கவிழ்க்கும் திட்டத்துடன் தான் ஆயுதம் தாங்கிய கும்பல் கலவரத்தில் ஈடுபட்டு வருவதாக ஆட்சியாளர் குற்றம் சாட்டியுள்ளனர். கலவரம் தொடங்கியதில் இருந்து இதுவரை அங்கு 5 ஆயிரம் பேர் கொல்லப்பட்டு உள்ளனர் என்று ஐ.நா. சபை கூறியுள்ளது. ஆனால், வலதுசாரி குழுக்கள் சாவு எண்ணிக்கை இதைவிட அதிகமாக இருக்கும் என்று தெரிவித்துள்ளது

சிரியாவில் நடந்து வரும் வன்முறையை கண்டித்தும், கலவரத்தை முடிவுக்கு கொண்டு வரவும், விரைந்து தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று ஐ.நா. சபையை ரஷ்யா வலியுறுத்தியது. ஆனால் இதில் எதிர்பார்த்த முன்னேற்றம் இல்லை என்று ரஷியா கவலை தெரிவித்துள்ளது.சிரியாவில் உள்ள அமெரிக்கர்கள் உடனடியாக தாய் நாடு திரும்புமாறு, அமெரிக்கா அரசாங்கம் நேற்று முன்தினம் புதிய அறிவிப்பை வெளியிட்டது. அமெரிக்கர்கள் சிரியாவுக்கு பயணம் மேற்கொள்ள வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டுள்ளது.

# பறவைக் காய்ச்சல் வைரஸை பயன்படுத்த தீவிரவாதிகள் சதி?

## அமெரிக்கா எச்சரிக்கை



பறவைக் காய்ச்சல் நோய், மனிதர்களுக்கு இடையே பரவுவது கிடையாது. எனினும், கடந்த 1997ஆம் ஆண்டு உலகின் பல்வேறு நாடுகளுக்கு அந்த நோய் பரவியதில் 600-க்கும் மேற்பட்டோர் பலியாகினர். இந்த நிலையில், பறவைக் காய்ச்சல் வைரஸ் (எச்5என்1) மூலமாக தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தக்கூடும் என்ற தகவல் வெளியாகி உள்ளது.

எனவே, பறவைக்காய்ச்சல் தொடர்பான புதிய ஆராய்ச்சி முடிவுகள் மற்றும் விவரங்கள் எதையும் வெளியிட வேண்டாம்.

அவ்வப்போது வெளியாகும் தகவலை பிரதி எடுத்து புதிய ஆய்வுகளை தீவிரவாதிகள் மேற்கொள்ளக் கூடும் என அமெரிக்காவை சேர்ந்த இரண்டு முக்கிய அறிவியல் ஆய்வுப் பத்திரிகைகளுக்கு அமெரிக்க அரசு தடை விதித்துள்ளது.

இதற்கிடையே சீனாவில் உள்ள நகரில் ஒரு கோழிப்பண்ணையில் இறந்த கோழியின் உடலில் எச்5என்1 வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. எனவே, கோழிப்பண்ணையில் உள்ள 17 ஆயிரம் கோழிகளை அழிக்க அரசு உத்தரவிட்டது. மேலும், சீனா உள்ளிட்ட நாடுகளில் இருந்து கோழிகளை இறக்குமதி செய்யவும் தடை விதித்துள்ளது

# பெண்களுக்கு 30 ஆண்களுக்கு 40 கவர்ச்சி மிகவும் அதிகரிக்கும் வயது

## ஆய்வில் தகவல்

(லண்டன்)

பெண்களுக்கு 30 வயதிலும், ஆண்களுக்கு 40 வயதிலும் கவர்ச்சி அதிகரிக்கும் என ஆய்வில் தெரியவந்துள்ளது. மனிதர்கள் எந்த வயதில் கவர்ச்சியாகக் காணப்படுகின்றனர் என்பது குறித்து சமீபத்தில் ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இதுபற்றி ஆண்கள் மற்றும் பெண்களிடம் தனித்தனியாக கருத்து கேட்கப்பட்டது. அதில், பெண்கள் 30 வயதிலும், ஆண்கள் 40 வயதிலும் கவர்ச்சியாக தெரிகின்றனர்.

ஏனெனில், 40வயதில் தான் ஆண்கள் அழகான கவர்ச்சியான உடல் அமைப்பைப் பெறுகின்றனர். அதுவே பெண்களைக் கவருகிறது. அது போன்று பெண்கள் தங்களது 30 வயதில்தான் கவர்ச்சிகரமாக இருக்கின்றனர். அந்த வயதில் தான் கவர்ச்சியான உள்ளாடைகளையும், வாசனை திரவியங்களையும் பயன்படுத்தத் தொடங்குகின்றனர்.



ஆண்கள் தங்களது 40 வயதுக்கு பிறகுதான் ஆடம்பரமான ஆடைகளை அணிவதில் விருப்பம் கொள்கின்றனர். மேலும், விருந்து விழாக்களில் பங்கேற்று மதுவகைகளில் நாட்டம் கொள்கின்றனர் என ஆய்வில் தெரியவந்துள்ளது.

# பதிவிறக்கப் பெட்டகம்

ஒவ்வொரு மொழியும் தன்னை அழியாப் புகழில் ஏற்றும் மகா காப்பியத்தைப் படைக்கும் ஆற்றல் கொண்ட தன் தலைமகனுக்காகத் தவமிருக்கிறது. அவன் பிறக்கும் வரை அது தன்னை மலடியாகவே கருதுகிறது. அப்படிப்பட்ட காப்பியம் பிறந்த பிறகு தாய்மையால் பூரிக்கிறது. தனக்கு இனி என்றுமே அழிவில்லை என்று இறுமாந்து கொள்கிறது. அந்தக் காப்பியம்தான் அந்த மொழிக்கும் அம்மொழி பேசும் மக்களுக்கும் அந்த தேசத்தையே உரிமையாக்கும் சாசனமாக பட்டயமாக அன்றுமுதல் மாறுகிறது. ஹீப்ரு மொழிக்கு ஒரு மோசஸ், கிரேக்க மொழிக்கு ஒரு ஹோமர், இலத்தீன் மொழிக்கு ஒரு விர்ஜில், இத்தாலிய மொழிக்கு ஒரு தாந்தே, ஆங்கில மொழிக்கு ஒரு மில்டன், வடமொழிக்கு ஒரு வால்மீகி, தமிழுக்கு ஒரு கம்பன். அதுபோல ஜேர்மன் மொழிக்கு ஒரு கதே. அவர் படைத்த காப்பியம் ஃபாஸ்ட்.

கடவுளும் என் தாய் தந்தையரும் எனக்கு உயிரையும் உடலையும் அளித்தனர் எனில் என் வாழ்வை எனக்கு அளித்தவர் கதே. எது மிகச் சிறந்த வாழ்வு? அதை வாழ்வது எப்படி? இந்த வினாக்கள் சிறு வயது முதலே என்னை அலைக்கழித்து வந்தன. இந்த வினாக்களுக்குத் தகுந்த பதிலை எனக்களித்தவர் கதே. என் வாழ்வில் பெரும் செல்வங்களை, அறிவுப் பொக்கிஷங்களை நான் அடைந்தது புத்தகங்களின் வாயிலாகத்தான். என்னுடைய சொர்க்கம் என்பது எல்லையில்லா ஒரு நூலகத்தில் உலகின் உன்னதங்கள் எல்லாவற்றையும் முடிவின்றி வாசித்துக் கொண்டிருப்பதுதான். என் வாழ்வின் பெரும்பகுதியை நூலகங்களில்தான் கழித்திருக்கிறேன். கதே என்ற பிரமாண்டமான புதையலை நான் கண்டெடுத்தது அங்குதான்.

– இரா. குப்புசாமி

கவிதை வாசிப்புப் பெருகிய ஒரு தருணத்தில் நான் கவிதை எழுதுவதை நிறுத்திக்கொண்டேன். அவ்வாறு வாசிப்புப் பெருகும் தருணத்தில் இன்றெழுதிக் கொண்டிருக்கும் பல கவிஞர்கள் தாங்களும் கவிதைகள் எழுதுவதை நிறுத்திக் கொள்வார்கள் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை எனக்குண்டு. வ.ஐ.ச. ஜெயபாலன், இளவாலை விஜேந்திரன் இருவரும் என் மனதிற்கு நெருக்கமான கவிஞர்கள். எனது உணர்வுகளை அவர்கள் எழுதியிருப்பதாகவே அவர்களைப் படிக்கும்போது நான் உணர்வேன். பிரேம் – ரமேஷ் மற்றும் மனுஷ்யபுத்திரன் என் கொண்டாட்டத்துக்குரிய கவிஞர்கள். ம. மதிவண்ணனின் கவிதைகள் நெருப்பு. அவரது கவிதைகளிற்குள் நுழைந்து ஒவ்வொரு தடவையும் சூடுபட்டே திரும்புகிறேன். மாலதி மைத்ரியும் சுகிர்தராணியும் லீனா மணிமேகலையும் ஆழியாளும் தமிழ்க் கவிதையின் மறுபாதிகள். ஏழு கடல்களையும் சர்ப்பங்களையும் காவல்களையும் மாயப் பொறிகளையும் தாண்டிச் சென்று உயிர் இரகசியத்தைக் கவர்ந்து வந்து நமக்கு அளிப்பவர்கள் அவர்கள். எளிய மனிதனின் அந்நியமாதலையும் தமிழகத்தின் சிறு நகரங்களின் ஆன்மாவையும் நான் முகுந்த் நாகராஜனின் கவிதைகளில் தரிசிக்கிறேன்.

– ஷோபா சக்தி

புத்தகங்களும் ஊர்சுற்றுதலும் மட்டுமே சந்தோஷம் கொள்ள வைக்கின்றன. கடந்து செல்லும் பாதைகள், எதிர்ப்படும் மனித முகங்கள் யாவிலும் கதைகள் ஒட்டியிருப்பதை காண முடிகிறது. கதையின் மீதான வியப்பும் மயக்கமும் என்றும் தீராதது. ஒவ்வொரு மனிதனும் எண்ணிக்கையற்ற கதைகளின் சேகரமாகவே தோன்றுகிறான். அவ்வகையில் எல்லா அன்றாட நிகழ்வுகளும் வியப்பானவையே.

– எஸ்.ராமகிருஷ்ணன்

ஒரு பூவிலிருந்து ஒரு வசந்தத்தை அறிய முடிவதுதான் கலை என்றார் மகாகவி வைலோப்பிள்ளை மேனன். மீண்டும் மீண்டும் இலக்கியம் செய்துகொண்டிருப்பது இதையே. ஒரு துளி தனி அனுபவத்தைக் கற்பனையால் பெருக்கி ஒரு மானுடப் பொது அனுபவமாக ஆக்கிவிடுகிறது. அனுபவமும் அனுபவித்தவனும் அது நிகழ்ந்த சூழலும் எல்லாம் மறைந்தழிந்த பின்னரும் மானுட அனுபவமாக அந்தத் தருணம் அழியாமல் நின்றுகொண்டிருக்கிறது... இலக்கியம் நம் வாழ்க்கையை விரிவுபடுத்தும். ஒரு வாழ்க்கைக்குள் ஓராயிரம் வாழ்க்கையை வாழச்செய்யும்.

– ஜெயமோகன்

எப்போதாவது படித்துவிட்டு யாராவது ஒருவர் ஆச்சா போச்சா என்கிறார் என்றாலும் இலக்கியச்சூழலில், தீவிரமாக ஒருவன் இயங்காமல் போகவே ஆயிரம் காரணங்கள் உள்ளன. ஆனால் வந்தவனெல்லாம் புலம்பிச் செத்தாலும், வாழையடி வாழையாய் எழுத்துக்காரர்கள் வந்துகொண்டே இருக்க ஒரே காரணம் மன அரிப்பின் காந்தலுக்கு இலக்கியமே களிம்பு என்பதுதான் போலும்.

– விமலாதித்த மாமல்லன்

அதிகாரம் எழுத்தாளனின் சொந்த வாழ்க்கைக்குள் எந்தவிதமான அனுமதியும் இன்றி வன்முறையைப் பிரயோகித்து ஆக்கிரமிப்பு செய்கிறது. இலக்கிய விமர்சகர்களோ அனுமதியோடு எழுத்தாளனின் சொந்த வாழ்க்கையை ஆக்கிரமிப்பு செய்து கொள்கிறார்கள்.

– மிலன் குந்தேரா

# வாழ்வாதார குறியீடுகளை மேம்படுத்தி அழிவின் விளிம்பிலிருந்து மீள வேண்டும்

## அரசபிரதிநிதிகளுடனான சந்திப்பில் வலியுறுத்தல்

நாட்டின் பல்வேறு சமூகங்கள் அமைதியாக வாழக்கூடிய பொறிமுறையொன்றை முன்வைப்பதற்கு நாட்டின் அரசியல் தலைமைகள் கடந்த காலத்தில் தவறிவிட்டன. என்பதை காலத்திற்குக் காலம் ஈ.பி.டி.பி. கூறிவந்துள்ளது.இதன் காரணமாக கல்வி,சுகாதாரம மற்றும் ஏனைய வாழ்வாதாரக் குறியீடுகளின்படி ஏனைய அபிவிருத்தியடைந்து வரும்நாடுகளுக்கும் முன்னுதாரணமாக விளங்கிய இலங்கை அழிவின் விளிம்பிலிருந்து மீள எழவேண்டுமென, அரச பிரதிநிதிகளுடன் கடந்த 19ஆம் திகதி நடந்த அரசியல் தீர்வு தொடர்பான சந்திப்பில் ஈ.பி.டி.பி. பிரதிநிதிகள் குழு தெரிவித்துள்ளது.

அரசியல் தீர்வு தொடர்பான இந்தச் சந்திப்பில் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையிலுள்ள விடயங்கள் குறித்து, தாம் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக எடுத்துக்கூறியதை மீளவும் சுட்டிக்காட்டியுள்ள ஈ.பி.டி.பி. பிரதிநிதிகள், அவ்விடயங்களை அரச தரப்பிற்கு தெளிவுபடுத்தியுள்ளனர். அந்த விடயங்கள் வருமாறு.

தமிழ் மக்களின் உண்மையான குறைகள் பற்றி கவனம் செலுத்த அடுத்து,

அடுத்து வந்த அரசாங்கம் தவறி விட்டமையே இலங்கையின்

இனப்பிரச்சினைக்கான மூல காரணம் என்பதை ஆணைக்குழு கருத்திலெடுத்துள்ளது.

அரசியல் ஒருமைப்பாடு ஒன்றை எய்துவதற்கு நீண்டகாலமாக பிரதான

தடையாக இருந்து வந்த விடுதலைப் புலிப்பயங்கரவாதம் முடிவுக்குகொண்டு

வரப்பட்ட பின்னர் நல்லிணக்க முறை வழியை மேலும் முன்னெடுப்பதற்கு,

முக்கியமாக, விளங்கும் அதிகாரப் பகிர்வுக்கு அரசியல் ஒருமைப்பாட்டினை எய்துதல்,

விசேடமாக அடி மட்டத்தில், பிரதேசங்களுக்கு (pheriphery) ஆகக் கூடுதல் அதிகாரப்பரவலாக்கல் (devolution), மத்தியில் ஆட்சிப் பகிர்வு (sharing)

மக்களின் தேவைகளை கவனிக்கக கூடிய பரவலாக்களுக்கு தகுந்த ஒரு முறைவழியை உருவாக்குவதில் மாகாணசபைகள் முறைவழி நடைமுறைகளுக்கு இடப்படுவதில் காணப்பட்டுள்ள குறைபாடுகளிலிருந்து

கற்றுக்கொண்ட பாடங்கள் பிரதேசங்களுக்கான அதிகாரப்பரவலாக்கல் பற்றிய பிரச்சினைகள், 13 ஆவது திருத்தத்தில் கையாளப்பட்டுள்ளனர், ஆனால், ஆட்சிப்பரவலாக்கலின் பரிமாணம் மற்றும் அதனை நடைமுறைப் படுத்தலும் இன்னமும் தீர்க்கப்படாமல் உள்ளன. மாகாணங்களின் பிரதிநிதிகள் அடங்கிய இரண்டாவதுசபையை

நிறுவக்கூடிய சாத்தியப்பாட்டை ஒரு மேலதிகமான பொறிமுறையாகப் பரிசீலனை செய்யலாம்.

தமிழ்மொழி தொடர்பான யாப்பு மற்றும் சட்ட ஏற்பாடுகளும், சரியாக

உள்ளன, ஆனால், அவற்றை நடைமுறைப்படுத்துவதில் சில குறைபாடுகளும், தவறுகளும் காணப்படுகின்றன.

மொழிக் கொள்கையை முழுமையாக நடைமுறைக்கிடுதல்.

உத்தியோகபூர்வ மொழிகள் கொள்கை வினைத்திறமை மிக்கதாக செயற்படுத்த வேண்டியது அவசியமாகும்.

விடுதலைப்புலிப் பயங்கரவாதம் முடிவுற்றது பற்றியும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி தலைமையில் வசதியான, மற்றும்



அகன்ற அடிப்படையி லான அரசாங்கத்தின் உதயத்தின் மூலம் ஒரு வழி பிறந்துள்ளது. இதனால்

அனைத்து சமூகங்களிடையே நல்லிணக்கத்தையும், ஒற்றுமையையும், கூட்டுறவையும் முன்னேற்றக் கூடிய விதத்தில் பலதரப்பட்ட ஆட்சிபுரியும்

பிரச்சினைகளில் கவனம் செலுத்தவும், சிறுபான்மை மக்களின் குறைகளுக்கு அரசியல் தீர்வுகளைக் காணவும், அனைத்துத துறைகளிலும் சட்டபூாவமான உரிமைகளை உணரவும் இச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

நல்லிணக்கத்திற்கும் - தேசத்தைக் கட்டி எழுப்புவதற்கும் ஆற்ற வேண்டிய

பணிகளாவன - அரச சிறுபான்மையினரிடம் கருசனை கொள்ள வேண்டும்,

இதற்குப் பதிலாக, சிறுபான்மையினரும், அரசு, நாடு தமது வகிபாகத்தின் பால் தம்மை மீளச் சிந்திக்க முன்வர வேண்டும்.

காணிக்கொள்கையை வகுப்பதில் உத்தேச தேசிய காணிப்பிரச்சினைக்கு (NLC) அரச காணிகள் சமமாகப் பகிர்வதற்கான வழிகாட்டல்களை உள்ளடக்க வேண்டும். 13 - ஆவது திருத்தத்தின் கீழ் இது ஒரு தேவையாக இருந்த போதிலும், அதற்கான சட்டவாக்க வரைபு தயாரிக்கப்பட்ட போதிலும், அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் அதனை நாடாளுமன்ற அங்கீகாரத்தைப் பெறுவதில் தவறிவிட்டன.

உத்தேச நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வரை, அங்கீகாரமளிக்கப்பட்ட ஏனைய நோக்கங்களுக்குத் தேவைப்படும் அரச காணிகள புறநீங்கலாக உள்ளது, இடம் பெயர்ந்த ஆட்கள் தவிர்ந்த ஏனையோருக்கு அரச காணி எதுவும், பராதீனப்படுத்துவதைத் தடுப்பதற்கு கடுமையான கட்டுப்பாடுகளைப் பின்பற்றவேண்டுமென ஆணைக்குழு பரிந்துரை செய்கிறது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை குறிப்பாக, சிறுபான்மையினரின் மனக்குறைகள், மற்றும் நல்லிணக்கம் பற்றிய பரிந்துரைகளை விரைவில் நடைமுறைப்படுத்துவதை அதிகரிப்பதோடு அப் பரிந்துரைகளை விரைவில் நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். .

இதனிடையே, மேற்படி அறிக்கையில் EPDP தொடர்பாக தெரிவிக்கப் பட்ட கருத்துரைகள் பற்றி வருத்தமடைகிறோம். EPDP மீதான குற்றச்சாட்டுக்களை நாம் மறுத்துரைக்கும் அதேவேளை, EPDP தலைவர் ஆணைக் குழுவின் முன் சாட்சியம் அளிக்கும் பொழுது, மொழிபெயர்ப்புத் தவறு குறித்து ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டு வந்தார். அவர் கூறியது தவறான எண்ணத்தில் முடிந்தது, அத்துடன் நாடாளுமன்றத்தின் முன் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கு முன் இந்தத் தவறான கருத்தை ஊடகங்களுக்கு அனுப்பியது ஏதேனும் உள்நோக்கம் கொண்டதா என எம்மைச் சிந்திக்க வைக்கின்றது.

இலங்கையில் உள்ள மக்கள் அனைவருக்கும், அவர்களின் மத, இன,மொழி

வேறுபாடுகளின்றி, அமைதியான வாழ்க்கையையே மனதார விரும்புகிறார்கள்,அவர்கள் அர்த்தபூர்வமான அரசியல் தீர்வுகளுக்கே நீண்டகாலமாக காத்திருக்கின்றனர். பிரச்சினைக்கு நியாயமான, நேர்மையான தீர்வே தமிழ்பேசும

மக்களின் அடிப்படைக் கோரிக்கையாகும். களைப்படைந்த பலவீனமடைந்த நிலையில் உள்ள தமிழ் மக்கள் யதார்த்தமாக நோக்கப்படுவதிலேயே ஆர்வம் கொண்டுள்ளனர்.

இலங்கைச் சமூகங்கள் அனைத்தும் எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்வதற்கு ஏற்றதான நிலையான அரசியல் தீர்வைக் காண்பதற்கு காலம் கனிந்து விட்டது. எனவே, அனைத்து சமூகங்களினதும், ஆதரவைப் பெறக் கூடியதான தமிழ்ப்பேசும் மக்களின் சட்டபூர்வமான வேட்கையை நிறைவு செய்யக்கூடிய ஒரு தீர்வை இங்கு முன் வைக்கின்றோம்.

13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் மூலம்

அரசியல் தீர்வுகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். 13 ஆவது திருத்தத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறான பொலிஸ் அதிகாரங்களை நடைமுறைப் படுத்தல், மாகாணங்களுக்கு வழங்குவதற்கு அனுகூலமான நிலமைகள் உருவாக்கப்படும் வரை அது மட்டுப் படுத்தப்பட்ட காலத்திற்கு ஒத்திவைக் கப்பட முடியும்.

அடுத்த கட்டத்தில், 13 ஆவது திருத்த மாகாண சபைகளை கூடுதல் அதிகாரமுடைய நிலையங்களாக உருவாக்குவதற்கு மேலதிக அதிகாரங்கள் அத் திருத்தத்திற்கு ஒப்படைக்கப்பட வேண்டும். அனைத்து சமூகங்களாலும சமத்துவமும், நியாயமும் கொண்ட பல்லின கோட்பாட்டின் மீதும் சட்ட ஆட்சி, பல்லினம், அனைத்து தனியாட்களின் உரிமைகளும் பயமின்றி செயற்படுத்த கூடியவாறானா அடிப்படையில் அதிகாரப் பரவலாக்கத்துடன் பகிரப்படும் விடயங்கள் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுதப்படும் பொழுது தமிழ் பேசும் மக்களின் உரிமைகளும், நேர்மையும் மீளப்பெற வழிபிறக்கும். தமிழ்பேசும் மக்கள் தமது அரசியல் பிரச்சினை படிப்படியாக தீர்த்து வைக்கப்படும் என்ற நம்பிக்கை இதனால் அவர்களுக்கு ஏற்படும் பிராந்தியங்களுக்கு படிப்படியாக அதிகார பரவலாக்கல் வழங்கப்படும் போது பயங்கள் நீக்கப் பட்டுவிடும், தமிழ் சிங்கள மக்களிடையே நம்பிக்கை ஏற்படும்.

அதிகாரப் பரவலாக்கல் பிரிவினைக்கு இட்டுச் செல்லாது என்றும் இது சமாதானம், சௌஜன்யம், நம்பிக்கை சகல இனங்களிடையே நிலவச் செய்யும என்றும், சிங்கள மக்களுக்கு நம்பிக்கையூட்டும். தெளிவான தூரநோக்குடனும், யாதார்த்தமான முறையிலும் எமது பிரச்சினையினை அணுகினால் மட்டுமே திருப்திகரமான, சுபீட்சமான எதிர்காலத்தை நாம் எய்த முடியும். இந்த யாதார்த்தமான தூரநோக்கும் எமது மக்களின் தொடரும் ஆதரவுமே நமது முன்னேற்றத்திற்குரிய பலத்தைத் தரும். நாடாளுமன்ற தெரிவுக்குழுவை மேலும் காலம் தாழ்த்தாது, கூட்டப்பட்டு அதன் விதப்புரைகளின் முடிவில் இறுதியான, நின்று நிலைக்கக் கூடிய தீர்வை எட்டுவதையும் வரவேற்கின்றோம். தெரிவுக் குழு கூடும் பொழுது விரைவான இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கு

ஒருமைப்பாட்டை முன்னெடுக்கும் நோக்கில் நாம் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடன் எமது கலந்துரையாடல்களை நடாத்த நடவடிக்கை எடுப்போம். இது விடயத்தில், தமிழ் கட்சிகளிடையே ஒரு பொதுவான புரிந்துணர்வை எட்டும் பொருட்டு "தமிழ் கட்சி அரங்கத்தை" மறுபடியும் கூட்டுவதற்கும நடவடிக்கை எடுபபோம்.

# தொழில் செய்யும் பெண்கள் தாய்ப்பாலூட்ட ஏற்பாடு

(கொழும்பு)

தொழிலுக்குச் செல்லும் தாய்மார்கள் தமது குழந்தைகளுக்கு தாய்ப் பாலூட்டுவதை இலகுபடுத்தும் வகையில் விசேட திட்டமொன்றினை குடும்பநல சுகாதார அலுவலகம் முன்னெடுத்துள்ளது.இதற்கமைய கொழும்பு குடும்பநல சுகாதார அலுவலக வளாகத்தில் குழந்தைகள் காப்பகமொன்று ஸ்தாபிக் கப்பட்டுள்ளதாக அதன் பணிப்பாளர் வைத்தியநிபுணர் தீப்தி பெரேரா கூறியுள் ளார். கொழும்பு நகரில் தொழில்புரியும் தாய்மார்கள் தமது குழந்தைகளை குறித்த காப்பகத்தில் ஒப்படைத்து தொழிலுக்குச் சென்று, மீண்டும் தாய்ப் பாலூட்டுவதற்கு அங்குவர முடியுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.எதிர் காலத்தில் இத்தகைய குழந்தைகள் காப்பகங்களை பிரதேச மட்டத்தில் ஸ்தாபிக்கவும் குடும்பநல சுகாதார அலுவலகம் உத்தேசித்துள்ளது.

# பகிடிவதைக்கு உட்பட்ட மாணவி மருத்துவமனையில்

(கொழும்பு)

றுகுனு பல்கலைக்கழகத்தில் கடுமையான முறையில் பகிடிவதைக்கு உட்படுத் தப்பட்ட முதலாம் ஆண்டு மாணவி ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளார். இந்த மாணவி பல்கலைக்கழகத்தின் சிற் றுண்டிச்சாலைக்குள் வைத்து பகிடிவ தைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலி ஸார் தெரிவிக்கின்றனர்.

இரண்டாம் ஆண்டு மாணவ, மாணவிகள் சிற்றுண்டிச்சாலைக்குள் மாணவர்களை வரிசையாக நிறுத்தி நெரிசலை ஏற் படுத்தியபோதே குறித்த மாணவி காய மடைந்துள்ளார். காயமடைந்த மாணவி சுயநினைவின்றி மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.பொலி ஸார் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அடைமழை தந்த அவலங்கள் முல்லையில் 3900 குடும்பங்கள் பாதிப்பு



(கிளிநொச்சி)

கடந்த சில நாட்களாகத் தொடர்ச்சியாகப் பெய்த மழையினால் 5 பிரதேச செயலக பிரிவுகளுக்குட்பட்ட மூவாயிரத்து 900 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை முதல் பெய்த கனமழையினால் ஏற்பட்ட வெள்ளத்தினால் குறித்த பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 51 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதைவிட இக்கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 50 வரையான குடும்பங்கள் இடம்பெயர்ந்து பொது இடங்களில் தங்கியுள்ளனர். எனினும் தற்போது வெளளம் வடிந்துவரும் நிலையில் இம்மக்கள் தங்களது இருப்பிடங்களுககுத் திரும்பிச் செல்ல ஆரம்பித்துள்ளனர்.

சில இடங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் மக்கள் பெரும் சிரமத்துடன் வாழவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிககப்படுகிறது.

இவ்வாறு வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் அரச சார்பற்ற நிறுவனங்களினால் உணவல்லாத பொருட்கள் வழங்கப்படுவதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (உ,கே)

# பண்ணை நெடுஞ்சாலையில் கடற்படையினர் சிரமதானம்

யாழ். பண்ணை ஊர்காவற்றுறை வீதியின் மோசமாக சேதமடைந்து குண்டும் குழியுமாகக் காணப்படும் பகுதிகள் கடற்படையினரினால் கல்லிட்டு நிரவப்பட்டு பயணிகளின் போக்குவரத்திற்குச் செப்பனிடப்பட்டு வருகின்றது.

கடந்த சில நாட்கள் மழையின போது குறித்த வீதி குண்டும் குழியுமாகக் கடுமையாகச் சேதமடைந்து காணப்படுகின்றது. இவ்வீதியினூடாக பயணம் செய்யும் தீவகப்பயணிகள் மிகுந்த சிரமத்துடன் பயணித்துவருகின்றனர்.

இவ்வாறு பயணிகளின் சிரமம் கருதி கடற்படையினர் தற்காலிக ஏற்பாடாக அவ்வீதியில் காணப்படும் சேதமடைந்த பகுதிகளில் கற்களை ஏற்றிவந்து போட்டு நிரவிவருகின்றனர். இதன் காரணமாக அவ்வீதியின் வழியாகப் பயணிக்கும் வாகனங்கள் மற்றும் பயணிகளின் சிரமம் சிறிது குறைந்திருப்பதைக் காணமுடிகின்றது.

இதேவேளை மண்டைதீவு செல்லும் வழியிலும் இவ்வாறு கடற்படையினால் சீர்ப்படுத்தப்படுகின்றது. (பா)

# பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீடம் ஸ்தம்பிதம்

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் விரிவுரைகள், ஏனைய கல்விசார் தொழிற்பாடுகள், மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் பங்குபற்ற தொடர்ந்து மறுத்துவருகின்றனர். மாணவர்கள் விரிவுரைகளுக்கு செல்ல மறுத்துவருவதால பல்கலைக்கழகத்தின் பொறியியற்பீடம் முற்றுமுழுதாக ஸ்தம்பிதமடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த பகிஷ்கரிப்பு உத்தியோகபூர்வமற்ற நடவடிக்கையென்றே கூறப்படுகின்றது. சகல மாணவர் சங்கங்களும் தற்காலிகமாக தடைசெய்யப்பட்டுள்ள நிலையில் இந்த பகிஷ்கரிப்பை உத்தியோகபூர்வமானதாகக் கொள்ள முடியாதெனவும் தகவல்கள் குறிப்பிடுகின்றன. மாணவர் சங்கங்களின் நடவடிக்கைகள் பல்கலைக்கழகத்தின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவதுடன், பாதுகாப்பு பிரச்சினைகளையும் தோற்றுவிக்கின்றனவெனக் கூறி உபவேந்தர் சகல சங்கங்களையும் தற்காலிகமாக தடைசெய்தார். பேராதனையிலிருந்து கொழும்புவரை செல்லவிருந்த மாணவர் ஊர்வலத்தை தடைசெய்யும் நீதிமன்றத்தின் கட்டளை காரணமாக இத்திட்டமும் கைவிடப்பட்டது.

பல்கலைக்கழகத்தின் மாணவர்களது அமைப்புகள் தடை செய்யப்பட்டமை, சட்ட விரோதமானது என, மாணவர்கள் சங்கங்கள் தெரிவித்துள்ளன. மேற்படி விடயம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யவிருப்பதாகவும் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை பல்கலைக் கழகத்தின் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல் மற்றும் உயிராபத்துக்கள் போன்ற செயல்களுக்கு எதிராகச் செயற்பட பல்கலைக்கழகத்திற்கு உரிமை இருப்பதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் காமினி சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

# கட்டுமீறிச் செல்கிறது போதைப்பொருள் பாவனை

## மாநாடு கூட்டி ஆராய்வு

யாழ்.குடாநாட்டினில் அதிகரித்து வரும் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் போதைப் பொருள் பாவனையினை கட்டுப்படுத்த மத ரீதியாகவேனும் குழுக்களை அமைப்பது நல்லதோர் முயற்சியாக இருக்கலாமென நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் நல்லிணக்கத்திற்கான ஆலோசகருமான ரஜீவ விஜயசிங்க தெரிவித்தார். ஏற்கனவே சில மாவட்டங்களில் அவ்வாறான அமைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளமையினை அவர் சுட்டிக்காட்டியுமிருந்தார்.

யாழ்.பொதுசன நூலகத்தில் நேற்று நடைபெற்ற சிவில் சமூகத்தினருடனான சந்திப்பின் போதே அவர் இத்தகவலை வெளியிட்டார். வடக்கு மாகாண அளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் நடைபெற்ற இச்சந்திப் பில் யாழ்.அரச அதிபர் இமெல்டா சுகுமார் மற்றும் கல்வி அதிகாரிகள் பாடசாலை அதிபர்கள் சிவில் சமூக அமைப்புக்களது பிரதிநிதிகள் மற்றும் மதப்பெரியார்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

குடாநாட்டில் எதிர்கொள்ளப்படும் பல்வேறு பிரச்சினைகள் பற்றி அங்கு உரையாடப்பட்டிருந்தது. அரசு மீள்குடியமர் வென்ற பேரில் தமிழ் மக்களை அநாதரவாக கைவிட்டுள்ளதாக சிவில் அமைப்புப் பிரதிநிதிகள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர். அதிகரித்துவரும் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் போதைப் பொருள் பாவனை பற்றியும் இந்த சந்திப்பின்போது சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

இங்கு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் நல்லிணக்கத்திற்கான ஆலோசகருமான ரஜீவ விஜயசிங்க யாழ். குடாநாட்டினில் அதிகரித்துவரும் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் போதை பொருள பாவனையினை கட்டுப்படுத்த மத ரீதியாகவேனும் குழுக்களை அமைப்பது நல்லதோர் முயற்சியாக இருக்குமென நம்பிக்கை வெளியிட்டார்.

குறிப்பாக இந்து மதம் சார்ந்தோ அல்லது கிறிஸ்தவ மதம் சார்ந்தோ மத ரீதியாகவேனும் குழுக்களை அமைப்பது நல்லதென அவர் தெரிவித்தார்.

# விரிவுரையாளர் சிலர் மீது உயர் கல்வியமைச்சர் குற்றச்சாட்டு

பேராதனைப் பல்கலைக்கழக மாணவரின் ஆர்ப்பாட்டத்தை சில விரிவுரையாளர்கள் தூண்டிவிட்டதாக உயர் கல்வியமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை பகிஸ்கரிப்பு வேளை பாடம் நடத்தியதற்காக மாணவர்களால் தாக்கப்பட்ட இரண்டு விரிவுரையாளர்களும் கல்விசாரா ஊழியர் இருவரும் கண்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதாகவும் அவர் கூறினார்.

நேற்று முன்தினம் நடந்த சம்பவங்களுக்கு விரிவுரையாளர்களில் ஒரு பகுதியினர் நேரடியாக பொறுப்பானவர்களாக இருந்துள்ளனர். சகல மாணவர் சங்கங்களையும் இடைநிறுத்தம் செய்ய உபவேந்தரும், மன்றமும் எடுத்த தீர்மானத்தை தான் ஆதரிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மாணவர்கள் இவ்வாறான நடவடிக்கைகளை தொடர்ந்தால் அவர்களின் பெற்றோர்கள் வீதியில் இறங்குவார்களெனவும் உயர் கல்வியமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

### இனப்பிரச்சினை...

குறித்து தென்னிலங்கையில் தற்போது எதிர்ப்புணர் வுகள் தணிந்துள்ளது. தீர்வுக்கு இதுவரை தடையாகவிருந்த புலிகள் இயக்கமும் அழிக்கப்பட்டிருக்கிறது. வெளிநாடுகள் கூட தமிழர்களின் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்பதில் மிகுந்த கரிசனை காட்டிவருகின்றன. அரசாங்கமும் தெரிவுக்குழுவை அமைத்து அதனூடாகப் பிரச்சினைக்குத் தீர்வு எட்டுவதற்கு முனைப்புக்காட்டி வருகிறது.

மொத்தத்தில் பிரச்சினைக்குத் தீர்வை எட்டுவதற்கான சூழல் தமிழ் மக்களுக்குச் சாதகமாகவே உள்ளது. எனவே இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிடாமல் அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் இணைந்து உரிய தீர்வினை எட்டுவதற்கு முயற்சிக்கவேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தனிடம் தான் எடுத்துவிளக்கியதாக அமைச்சர் டக்ளஸ் தெரிவித்தார்.

### காணி - பொலிஸ்...

முன்னெடுக்க முடியாது. ஆடு, மாடுகளைக் கூட வளர்க்கமுடியாது. குறிப்பாக விவசாயம் செய்யமுடியாது. மக்களுக்கு காணி பகிர்ந்தளிக்க முடியாது. அதேபோன்று பொலிஸ் அதிகாரம் இல்லாவிட்டால் மாகாணத்தில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட முடியாது. எனவே இவைகள் இல்லாத ஒரு அரசியல் தீர்வு தமிழ் மக்களுக்கு அவசியமில்லை. காணி, பொலிஸ் அதிகாரங்கள் 13 ஆம் திருத்தத்தில் முழுமையாக இல்லாவிட்டாலும் ஓரளவு குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இதனை அரசு வழங்க மறுத்தால் 13 ஆவது திருத்தச் சட்டத்தை புறந்தள்ளியுள்ளதாகவே கருதவேண்டியுள்ளது.

இப்படியிருக்கையில் இனப்பிரச்சினை தீர்வுக்கு 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு அப்பால் சென்று '13 + +' என்ற தீர்வை முன்வைக்கவுள்ளதாக அரசாங்கம் உலக நாடுகளுக்கு கூறிவருவது எவ்வாறு? என கூட்டமைப்பு சுரேஸ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டார்.

### அனுமதியற்ற...

ஆணையாளர் சரவணபவ, பிரதம பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜீவநாதன், சுற்றுச் சூழல் அதிகாரசபையின் மாநகரசபை உறுப்பினர்கள், விடுதி உரிமையாளர்கள் ஆகியோரும் இதில் பங்கேற்றிருந்தனர். கடந்த யுத்த காலத்தில் பாதிப்புக்கள் ஏற்பட்டிருந்ததின் காரணமாக யாழ்நகரில் அமைக்கப்படும் விடுதிகள் மீதான கட்டுப்பாடுகள் சிறிது தளர்வு கடைப்பிடிக்கப்பட்டிருந்தபோதும் தற்போது அக் கட்டுப்பாடுகளை இறுக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாய சூழல் யாழ். மாநகரசபைக்கு ஏற்பட்டிருப்பதாகவும் இதில் வலியுறுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக யாழ். நகரில் மாநகர சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றின் அனுமதியின்றி தொழிற்படும் விடுதிகள் எதிர்வரும் 2012 மார்ச்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பதாக அவற்றிக்குரிய அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது.

இதனை மீறி மாநகரசபை அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதியின்றித் தொழிற்படும் அனைத்து விடுதிகளும் எதிர்வரும் 2012 மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்குப் பிற்பாடு பொலிஸாரின் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டு சீல் வைத்து மூடப்படவுள்ளதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இக்கலந்துரையாடலில் விடுதி உரிமையாளர்களும் தாம் எதிர்நோக்கும் நடைமுறைச் சிக்கல்கள் குறித்தும் தமது கருத்துக்களை முன்வைத்ததுடன் அனுமதியின்றித் தொழிற்படும் விடுதிகளினால் அனுமதி பெற்று விடுதிகளை நடாத்துபவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் எடுத்துக் கூறப்பட்டது. (பா)

### மங்களநேசன்...

தாக்கப்பட்டுள்ளார். மூன்று மோட்டார் சைக்கிள்களில் பின் தொடர்ந்து வந்த கும்பலொன்றே தாக்குதலை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளது. காயமடைந்த மனுவல் மங்களநேசன் வீதியால் பயணித்த சிலரால் மீட்கப்பட்டு யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிககப்பட்டுள்ளார.(எஸ்)

### பாலியல்...

சென்று வீட்டின் கதவைப் பூட்டிவிட்டு சிறுமியின் மீது பலாத்காரம் செய்துள்ளார். குறித்த சிறுமி தப்பித்து ஓடி அயல் வீட்டுக்காரரிடம் தஞ்சமடைந்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து அயலவர்கள் குறித்த இளைஞரைப் பிடித்தனர். பின்னர் சிறுமியின் தாயாரிடம் நடந்த சம்பவம் குறித்துத் தெரிவிக்கப்பட்டது. தாயார் பொலிஸில் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டு யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு தற்போது விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். சிறுமி சட்ட வைத்திய அதிகாரியின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். (எஸ்)

### இனப்பிரச்சினைக்கு...

காலத்தைக் கடத்தும் செயல் என கெஹலிய ரம்புக்வெல்ல குறிப்பிட்டார். இந்தியாவை எடுத்துக்கொண்டால் சோனியாகாந்தி வேறு மாநிலங்களுக்குச் செல்லவேண்டுமாயின் மாநில ஆட்சியாளரிடம் அனுமதி கோரவேண்டிய நிலை இருப்பதாகவும் அவ்வாறு இருக்க இலங்கை மக்கள் விரும்பவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

# தொழில் முயற்சியாளர் சம்மேளனம் மட்டக்களப்பில் அங்குரார்ப்பணம்





(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வரும் பெண்களை ஒன்றிணைத்து மாவட்ட பெண்கள் தொழில் முயற்சியாளர் சம்மேளனத்தை ஆரம்பிக்கும் வைபவம் நேற்றுக் காலை மட்டக்களப்பு நெக்டெப் மண்டபத்தில் மாவட்ட வர்த்தக கைத்தொழில் சம்மேளன தலைவர் கே.ரஞ்சிதமூர்த்தி தலைலைமயில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாநகர மேயர் திருமதி சிவகீதா பிரபாகரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். பாரம்பரிய சிறு கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அமைச்சின் செயலாளர் செல்வி கே.தங்கேஸ்வரி உட்பட ஏராளமான பாரம்பரிய சிறுகைத்தொழில் முயற்சியாளர்கள் கலந்துகொண் டனர்.

மட்டக்களப்பு மர்வட்ட தொழில் முயற்சியாளர் சம்மேளனத்தின் தலைவியாக திருமதி வை.அஜித்குமார் தெரிவு செய்யப்பட்டார்.

இவ்வமைப்பிற்கு ஐரோப்பிய ஒன்றியம் அனுசரணை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சி நகரில் கடை உடைத்து திருட்டு

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 3 வர்த்தக நிலையங்கள் உடைக்கப்பட்டு பெறுமதிவாய்ந்த பொருட்கள் மற்றும் பணம் .என்பன களவாடப்பட்டுள்ளது.

இதன்படி கிளிநொச்சி நகரப் பகுதியில் அமைந்துள்ள தாரணி இலத்திரனியல் விற்பனை நிலையம் உடைக்கப்பட்டு ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இலத்திரனியல் உபகரணங்கள் பணம் என்பனவும், கரடிப்போக்கு சந்தியில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையம் ஒன்றும் அதன் அருகில் இருந்த கடை ஒன்றும் உடைக்கப்பட்டு எரிபொருள் நிலையத்தில் 14 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒயில் ஒரு தொகைப்பணம் என்பனவும் களவாடப்பட்டுள்ளது.

மற்றைய கடையிலிருந்த பெறுமதியான பொருட்களும் களவாடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக 3 வர்த்தக நிலைய உரிமையாளர்களும் கிளிநொச்சி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-கே)

## மட்டக்களப்பில் இந்தியர்கள் கைது

(கொழும்பு)

சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்து மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலை பகுதியில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுவந்த இரு இந்திய பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர். களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படை அதிகாரிகளால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் நேற்று மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ள நிலையில் கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சவுக்கு மரம் நடுகை மண்டைதீவில் செயற்றிட்டம்

மண்டைதீவு கடல் நீரேரிப் பகுதியில் கடலரிப்பைத் தடுக்கும் முகமாக சவுக்கு மரங்கள் நாட்டப்பட்டு வருகின்றது.

கடந்த சில நாட்களாக குறித்த பகுதிகளில் யாழ்.மாவட்ட நீர்ப் உபாசன திணைக்களம் இவ் நடவடிக்கையினை முன்னெடுத்து வருகின்றது.

மண்டைதீவுப் பகுதியைச் சூழ அமைக்கப்பட்டிருக்கும் உவர் நீர்த்தடுப்பணையின் ஒரு பகுதி வேலைகள் முற்றுப் பெற்றுள்ள நிலையில் அவ் உவர் நீர்த்தடுப்பணைகள் கடல் நீரேரிப் பக்கமாக இச்சவுக்கு மரங்கள் நாட்டப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## அநாதரவாக வீதியில் கிடந்த ஒரு இலட்சம் பணம்

(வவுனியா)

வவுனியா நகர் இரண்டாம் குறுக்கு வீதியில் நிலத்தில் விழுந்து கிடந்த 1 லட்சம் ரூபா பணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

வீதியில் கைவிடப்படிருந்த நிலையில் 100 ,1000 ரூபா தாள்கள் அடங்கிய 1 லட்சம் ரூபா பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. பட்டுள்ளது.

பணத்தை மீட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் வவுனியா பொலிஸ் நிலைய மோட்டார் வாகன பிரிவிற்கு தொலைபேசி மூலம் தகவல் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து உடன் ஸ்தலத்திற்கு விரைந்த பொலிஸார் பணத்தை பொலிஸ் நிலையத்துக்கு எடுத்து சென்றுள்ளனர்.

நேற்றுக் காலை 9.30 மணியளவில் பணத்தை மீட்ட வவுனியா பொலிஸார், பணத்துக்கு சொந்தக்கார் யார் என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## புதிய பரீட்சை ஆணையாளர்



(கொழும்பு)

புதிய பரீட்சைகள் ஆணையாளராக, டபிள்யு. எம்.ஜே புஸ்பகுமாரவை நியமிக்க அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது என அரசாங்க தகவல் திணைக்களம் செய்தி வெளியிட்டுள்ளது. இவர் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் பணியை ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுகிறது.

## வங்கியிலிருந்து எடுத்து வந்த பணம் வழியில் கொள்ளை போனது

(மல்லாகம்)

வங்கியிலிருந்து வந்த பெண்ணை தொடர்ந்து சென்ற இளைஞரொருவர், அப்பெண்ணிடமிருந்த ஒரு இலட்சம் ரூபாவை பறித்துக் கொண்டு சென்ற சம்பவம் மல்லாகத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

மல்லாகம் சந்தியிலுள்ள வங்கியிலிருந்து பணத்தை எடுத்துக் கொண்டு ஏழாலைப் பகுதியை நோக்கிச் சென்ற இப்பெண்ணை குறித்த இளைஞர் சைக்கிளில் தொடர்ந்து சென்றார். இந்த நிலையில் அப்பெண் புகையிரதக் கடவைக்கு அண்மையில் சென்றபோது அவரிடமிருந்த கைப்பையை பறித்துக்கொண்டு தப்பிச்சென்றுள்ளார்.

இது குறித்து தெல்லிப்பளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கட்டுநாயக்காவில் இருவர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் கடத்திச் செல்லப்படவிருந்த ஒரு தொகை வெளிநாட்டு நாணயங்களுடன் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து இரு இந்திய பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்று அதிகாலை குறித்த இந்திய பிரஜைகள் கைது செய்யப்பட்டதாக கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் குறிப்பிட்டனர். கைது செய்யப்பட்ட இந்திய பிரஜைகள் இலங்கையிலிருந்து சென்னை நோக்கிச் செல்லவிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களிடம் இருந்து 20 லட்சத்திற்கும் அதிகமான வெளிநாட்டு நாணயங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இதில் அமெரிக்க டொலர், அவுஸ்ரேலிய டொலர், சிங்கப்பூர் டொலர் மற்றும் இந்திய ரூபா ஆகியன அடங்குவதாக விமான நிலைய சுங்க அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

## கதவுத் திருடர்கள் மாட்டினர்

இரவு வேளை வீட்டுக் கதவைத் திருடிக்கொண்டு வந்தவர்கள் தற்செயலாக மாட்டிக்கொண்டனர். உடுவில் பிரதேசத்தில் திண்மக் கழிவுகள் அகற்றுவது சம்பந்தமாக நேற்று முன்தினம் இரவு ஒலிபெருக்கி மூலம் பிரதேசசபையினர் அறிவித்து வந்தனர். இதன்போது லாண்ட் மாஸ்டர் ஒன்று சைக்கிளில் வந்த சிறுவன் மீது மோதி விட்டு தப்பிச் சென்றது. இதனை அவதானித்த அறிவித்தல்காரர்கள் லாண்ட் மாஸ்ரரைத் துரத்திச் சென்று பிடித்தனர். இதன்போதே அதில் வீட்டுக் கதவுகள் திருடிச் செல்வதைக் கண்டனர். இதன் போது பிடிபட்டவர்கள் சுன்னாகம் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டனர்.

## குற்றச்சாட்டு தொடர்பில் நம்பகத்தன்மை இல்லை

(கொழும்பு)

பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச மீது போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நம்பகத்தன்மை இல்லையென ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான இலங்கையின் பிரதி வதிவிடப் பிரதிநிதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். ஜெனரல் தரத்தில் பதவி வகித்த இராணுவ அதிகாரி சத்தியக்கடதாசி ஒன்றின் மூலம் இலங்கைப் படையினர் போர்க்குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக வெளிநாட்டில் பிரசாரம் செய்துள்ளார்.

இந்தநிலையில் குறித்த அதிகாரிக்கு அமெரிக்கா புகலிடம் வழங்கியுள்ளது. எனினும், 58 ஆம் படைப் பிரிவைச் சேர்ந்த எந்தவொரு உயரதிகாரியும் அமெரிக்காவிற்கு தப்பிச் செல்லவில்லை என்றும், போர் நிறைவடைந்து இரண்டு வருடங்கள் கடந்துள்ள நிலையில் போலி இராணுவ உத்தியோகத்தர்கள் தோன்றி பொய்ப்பிரசாரங்களை மேற் கொண்டு வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்வாறு குற்றம் சுமத்தும் எவரும் தம்மை அடையாளப்படுத்திக் கொள்வதில்லை எனவும் இதனால் இந்தக் குற்றச்சாட்டுக்களின் நம்பகத்தன்மை இல்லாது போயுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். குறித்த அதிகாரி அமெரிக்காவில் இருந் துகொண்டு லண்டனில் இருந்து வெளிவரும் த ரெலிகிராப் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் முள்ளிவாய்க்காலில் சரணடைய வந்த புலிகளின் உறுப்பினர்களை கோத்தபாயவின் உத்தரவின் பேரிலேயே படையினர் சுட்டுக்கொன்றதாக தகவல் வெளியிட்டிருந்தார்.

## நஞ்சருந்திய இளைஞன் மரணம்

(யாழ்ப்பாணம்)

நஞ்சருந்திய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் இரண்டு நாட்களாக தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த இளைஞர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த குலேந்திரன் தீபன் (வயது-25) என்பவராவார்.

இவரது சடலம் தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (எப்.எஸ்)

## பொறுப்பற்ற ஊடகங்கள் மீது அரச அதிபர் சீற்றம்



(யாழ்ப்பாணம்)

பெண்கள் மீதான வன்முறை செய்திகளுக்கு யாழில் ஊடகங்கள் முன்னுரிமை கொடுக்கின்ற அதேவேளை பெண்கள் விடயத்தில் சமூகப் பொறுப்போடு செயற்படவேண்டும் என யாழ். மாவட்ட அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

தியாகி அறக்கொடை நிலையத்தில் நேற்று நடைபெற்ற பெண்கள் வன்முறை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு ஊடகவியலாளர்களுக்கான கருத்தரங்கின் போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யாழ். சமூகம் கட்டுக்கோப்பான சமூகமாக இருந்து வருகிறது. அதைச் சீரழிப்பதற்கு ஊடகங்கள் சில செயற்படுவதாகவும் இந்த ஊடகங்கள் சமூகப் பொறுப்போடு செயற்பட்டு எதிர்கால சமூகத்தைப் பாதுகாக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

## பண்டிகைக் காலத்தில் மதுபோதையுடன் வாகனம் செலுத்துவோருக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

நத்தார் மற்றும் புதுவருடக் காலத்தில் மதுபானம் அருந்திய பின் வாகனம் செலுத்த வேண்டாம் என சாரதிகளுக்கு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். மதுபானம் அருந்தியபின் வாகனம் செலுத்துவது கண்டுபிடிக்கப்பட்டால் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் எச்சரித்துள்ளனர்.

மதுபோதையில் வாகனம் செலுத்துதல் மற்றும் அதிவேகமாக வாகனம் செலுத்துவதன் காரணமாக வீதிவிபத்துகளின் எண்ணிக்கை அதிகரித்திருக்கும் நிலையில் சாரதிகள் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளனர். சராசரியாக வீதிகளில் இடம்பெறும் 10 விபத்துகளில் எட்டு விபத்துகளுக்கு இவையே காரணமாக இருப்பதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன கூறினார். மதுபோதையுடன் வாகனம் செலுத்துபவர்களை கண்டுபிடிப்பதற்காக 24 மணித்தியாலமும் ரோந்து சேவைகள் இடம்பெறுவதுடன் திடீர் சோதனைகளும் மேற்கொள்ளப்படும் என அவர் கூறினார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 டிசம்பர் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.